வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 07.09.2022 புதன்கிழமை இதழ் : 272 பக்கங்கள் : 16

MARUTHI MONEY EXCHANGE

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



## 22ஆம் திருத்தத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்!

### உயர்நீதிமன்றம் வியாக்கியானம்

கொழும்பு, செப். 06

22 ஆவது திருத்தச் சட்ட வரைவு அரசமைப்புக்கு அமைவானதாக இருந்தாலும் சில சரத்துக்களை நிறைவேற்ற பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பாராளுமன்றுக்கு தெரிவித்துள்ளது.

22 ஆவது திருத்தம் குறித்த உயர்நீதிமன்றின் வியாக்கியானத்தை நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

15

## சர்வஜன வாக்கெடுப்பின்றி ‘22’ நடைமுறைக்கு வரும்!

### அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, செப். 07

22ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் சர்வஜன வாக்கெடுப்பு இன்றி அமுல்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்கள் பின்பற்றப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இலங்கையின் போர்க் குற்ற விவகாரம்; சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்குக!

## உலக நாடுகளை கோரினார் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர்

ஜெனிவா, செப்ரெம்பர் 07

**அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் போர் குற்றங்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட சில இராணுவ அதிகாரிகளுக்கு தீவிரமாக ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறலுக்கான முன்னேற்றம் இல்லாத நிலையில், இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும் உலகளாவிய ரீதியில் உள்ள வழிகளைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் முயற்சிகளில் ஏனைய நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.**

**- இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

15

## தமிழிலும் தேசிய கீதம்! ஐ. தே. க. ஆண்டுவிழாவில்!

கொழும்பு, செப். 07

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டுவிழாவில் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு விழா நேற்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன்போதே, நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் தமிழ், சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டுவிழா நிகழ்வில் ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர்

15

## 2025ஆம் ஆண்டுக்குள் வளமான நாடு; இறுதியை காண நான் இருக்கமாட்டேன்!

### ஐ. தே. கவின் ஆண்டுவிழாவில் ஜனாதிபதி உருக்கம்

கொழும்பு, செப். 07

2020-2025 ஆண்டுக்குள் பலமான வளமான நாட்டை உருவாக்குவோம். அடுத்த ஆண்டே அதனை நோக்கி பயணிப்போம். இதன் இறுதியைப் பார்க்க நான் இருக்க மாட்டேன். ஆனால் இன்றைய இளம் சமுதாயம் வளமாக வாழும் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. எமது கொள்கையை உறுதியாக முன்கொண்டு செல்வோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், நாம் அனைவரும் ஒன்றிணைவோம் - ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுப்போம். மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் சகலரும் ஒன்றிணைந்து அச்சமின்றி இந்த பயணத்தை ஆரம்பிப்போம். முதல் போராட்டம் முடிந்துவிட்டது, நாட்டை ஒன்றிணைக்கும் இரண்டாம் போராட்டத்தை இன்றில் இருந்து ஆரம்பிக்கிறேன் என்றும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு விழா கொழும்பு - சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில்

15

## சர்வதேச நீதிப் பொறிமுறை நிலைப்பாட்டில் ரெலோ உறுதி!

### பேச்சாளர் சுரேந்திரன் அறிக்கை



யாழ்ப்பாணம், செப். 07

சர்வதேச நீதிப் பொறிமுறை, சர்வதேச விசாரணை என்பவற்றுக்குக் குறைவான எந்த விடயங்களும் தமிழ் மக்களுக்கு தீர்வைத் தராது என்பதில் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கிறோம் - அதற்காக உழைத்தும் வரு

15

## தமிழருக்கான மாகாண சபையில் இன்று அதிகாரங்கள் யாரிடம்?

### சிறீதரன் எம். பி. சபையில் கேள்வி

கொழும்பு, செப். 07

தமிழர்களுக்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபை திட்டத்தில் இன்று அதிகாரங்கள் யாரிடம் இருக்கின்றன என்று பாராளுமன்றில் நேற்று கேள்வி எழுப்பினார் சிறீதரன் எம். பி.

அத்துடன், 80 வருடங்களாக நீடிக்கும் இனப் பிரச்னைக்கு தீர்வு காணவே மாகாண சபை கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் தகுதியுள்ள அரச சேவையாளர்கள்

15

## “எரிபொருளை 50 ரூபாயால் குறைக்கலாம்”

கொழும்பு, செப். 07

“எரிபொருள் விலை சூத்திரம் அமுல்படுத்தப்பட்டால், உலக சந்தையில் உள்ள விலைகளுக்கு ஏற்ப ஒரு லீற்றர் எரிபொரு

15

## புதிய தேசிய பாதுகாப்பு சட்டம் அமைச்சரவை அனுமதியளிப்பு!

கொழும்பு, செப். 07

தேசிய பாதுகாப்பு தொடர்பான புதிய சட்ட முறைமையை அறிமுகப்படுத்தத் அரசாங்கம் தீர்மனித்துள்ளது. இதற்கு அமைச்சரவையும் அனுமதியுள்ளது.

பயங்கரவாதம், வன்முறை தீவிரவாதத்தின் புதிய வடிவங்கள் தொடர்பான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவும் தற்போது காணப்படும் பயங்கரவாத தடுப்பு சட்டத்திலுள்ள பல வீனங்களை தவிர்ப்பதற்கும் அவ்வா

15

## இப்படியும் நடக்கிறது...!

தாயகத்தில் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, ஒரு புலம்பெயர் நாடொன்றில் நடந்த மேடை நாடகம் ஒன்றை காணொலியில் பார்த்த ஞாபகம்.

ஊரில் தாக்குதல் நடக்கும் செய்தியை ஒருவர் மற்ற வருக்கு சொல்லுவார். உடனே மற்றவர் கேட்பார், "அவங்களில எத்தினை? எங்களில எத்தினை?" என்று.

அவருக்கு "எங்களில்" பார்க்க "அவங்களில்" பலர் இறந்திருக்க வேண்டும் என்பதுதான் விருப்பம் என் பதை அவரின் கேள்வியே உணர்த்தி நிற்கும்.

அவரைப் பொறுத்தவரை "அவங்களில்" அதிகம் என்றால் மகிழ்ச்சிதான். ஆனால், "எங்களில்" - அது தான் நமது இளைஞர்கள் மடிவது ஒன்றும் அவருக்கு பெரிய விடயமாகத் தெரியாது. ஏனெனில், மடிவது அவரின் பிள்ளைகள் இல்லைத்தானே என்பதை அவ ருக்கு உணர்த்துவதுபோல நாடகம் சென்றுகொண்டி ருக்கும்.

அந்த நாடகத்தில் இன்னுமொரு விடயமும் சொல் லப்படும். படையினரால் ஒரு தமிழர் சுட்டுக் கொல் லப்பட்டால், அது படையினர் சுட்டுக்கொன்றனர் என்று தெளிவாக அந்தச் செய்தி சொல்லும். ஆனால், அதுவே நமது இயக்கத்தவர்களால் ஒருவர்- ஒரு தமிழர் சுட்டுக்கொல்லப்பட்டால் இனந்தெரியாதவர்க ளால் சுட்டுக்கொலை என்றுதான் அந்தச் செய்தி சொல்லும்.

இது அந்தக் காலத்தில் நமது தமிழ் ஊடகங்களின் "செல்நெறி". "ஈழநாடு"வும் உட்படத்தான்.

இதை ஏன் இப்போது சொல்கிறீர்கள் என்று கேட் கலாம். வேறு ஒன்றுமில்லை. நேற்று லண்டனிலிருந்து ஒருவர் தொலைபேசியில் பேசினார். முன்னாள் போராளி இயக்கம் ஒன்றின் முக்கியஸ்தர் அவர். இந்த இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாக எழுதிய சமாச்சாரங்களை ஞாபகப்படுத்தியவர், "அந்த பழக்கதோஷம் இன்னும் "ஈழநாடு"வுக்கு போகயில் லைப் போல..." என்றார்.

எனக்கு அவர் எதைச் சொல்லல வருகிறார் என்று தெரியவில்லை.

"விளக்கமாகத்தான் சொல்லுமன்" என்று கேட்டேன்.

"இல்லை. சுமந்திரன் யாரைச் சந்தித்தாலும் அல்லது எந்த விடயம் குறித்து கருத்துச் சொன்னாலும் அது கூட்டமைப்பின் சந்திப்பு, அல்லது கூட்டமைப்பின் கருத்து என்று எழுதுகிறீர்கள். தலைப்பு போடுகி றீர்கள். ஆனால், ரெலோ சந்தித்தால் அல்லது கருத்துச் சொன்னால் மட்டும் அது என்ன கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ சந்திப்பு என்று போடுகிறீர்கள்?", என்றார்.

அது பத்திரிகைகளின் தவறு அல்லவே, அந்தச் சந்திப்பு முடிந்த பின்னர் ரெலோ ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் ரெலோ சந்தித்ததாகத்தானே எழுதியிருந்தார்கள். அப்படியிருக்கையில், நாங்கள் எப்படி கூட்டமைப்பு என்று போடுவது என்று திரும் பக் கேட்டபோது, அவர் சொன்னார்.

"அது எனக்கும் தெரியும். ஆனால், நான் முன்னர் இயக்கங்களால் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்ற போது நீங்கள் இனந்தெரியாவதர்களால் சுட்டுக்கொல் லப்பட்டதாக எழுதுவதை ஏன் ஞாபகப்படுத்தி னேன்?", என்று கேட்டவர், தானே பதிலையும் சொன்னார்.

"இயக்கங்கள்மீது மக்களுக்கு வெறுப்பு வரக் கூடாது என்ற நல்ல நோக்கம்தானே? அதுபோலத் தான், தமிழ் அரசுக் கட்சியிலிருந்து ஒருவர் தனிப் பட்ட வகையில் நடத்தும் சந்திப்புக்களையும் அறிக்கைகளையும் கூட்டமைப்பின் பெயரில் வெளி யிடுகின்றீர்கள், அதுவும் கூட்டமைப்பைப் பாது காக்கத்தானே", என்று கேட்டார் அவர்.

அவருக்கு தெரியவில்லையோ என்னவோ, இப்படி போடுவதால்தான், கூட்டமைப்பே இப்படி தமிழ் மக்களின் நம்பிக்கையை வேகமாக இழந்து கொண்டிருக்கின்றது என்பது.

ரெலோவின் சந்திப்பு, தமிழ் அரசின் ஒருசிலரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எழுதுகின்றபோது தான், அண்மையில் நடந்த தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பில் சிவஞானம் சிறீதரன் எம். பி. தெரிவித்த கருத்துக்களும் ஞாபகத்துக்கு வருகின்றன. அவரின் அந்த கருத்துக்கள் பற்றி பிறிதொரு நாளில் பேசுவோம்.!

- ஊர்க்குருவி

# எரிபொருளுடன் காத்திருக்கும் கப்பல் ஒருநாள் தாமத கட்டணம் 75,000 டொலர்!

கொழும்பு, செப். 07

ஒரு இலட்சம் மெற்றிக் தொன் கச்சா எண்ணெயுடன் கப்பலொன்று இலங்கை கடற்பரப்பில் காத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த கச்சா எண்ணெய் கப் பலுக்கு பணம் செலுத்த முடி யாத நிலையில் இரு வாரமாக கப்பல் காத்திருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது.

யூரல் நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பல் கடந்த ஒகஸ்ட் 23ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தது டன், பணம் செலுத்த முடியாத தால் இன்னும் கடலிலேயே தரித்துள்ளது.

எண்ணெய் நிறுவன வட் டாரங்களின்படி, தாமதக் கட் டணமாக ஒரு நாளைக்கு 75,000 அமெரிக்க டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என தெரி விக்கப்படுகின்றது.

கோரல் எனர்ஜி நிறுவனத் தினால் இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த 128,000 மெற் றிக் தொன் கச்சா எண்ணெய்க்கு பதிலாக இந்த கப்பல் வந்துள் ளது.

இந்த யூரல் கப்பலின் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு பணி யின் போது 52 சதவீதம் கறுப்பு எண்ணெய், 21 சதவீதம் டீசல் மற்றும் 12 சதவீதம் பெற்றோல் பெறப்படும் என்று அந்த வட் டாரங்கள் கூறுகின்றன.

இந்த கச்சா எண்ணெயின் அடர்த்தி அதிகரிப்பால், 50 ஆண்டுகளுக்கும் மேலான சுத்திகரிப்பு ஆலைக்கு செல்வ தால், சுத்திகரிப்பு நிலையத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ஐ)

### கிருசாந்தி நினைவேந்தல்

## செம்மணியில் இன்று!

யாழ்ப்பாணம், செப். 07

படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருசாந்தி குமாரசாமியின் நினைவேந்தல் நிகழ்வு இன்று புதன்கிழமை செம்மணியில் நடைபெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது.

1996ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் மாணவி கிருசாந்தி, அவரின் தாயார், சகோதரர், அயலவர் ஆகியோர் செம்மணி காவலரணில் கொல்லப் பட்டு, புதைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனர்த்தம் குறித்து அறிவிக்க துரித தொலைபேசி இலக்கம்!

கொழும்பு, செப். 07

அனர்த்த நிலைமை தொடர்பில் அறிவிப்பதற்காக 117 என்ற துரித தொலைபேசி இலக்கம் 24 மணி நேரமும் செயல்படுத்தப் படவுள்ளது. அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ள தேவை யான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப் புரையின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு, சம்பந்தப்பட்ட அமைச்சு களுக்கு நேரடியாக உத்தரவு பிறப்பிக்குமாறு அறிவித்துள்ளார்.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக மக்கள் எதிர்நோக் கியுள்ள பிரச்னைகளுக்கு நிவாரணம் வழங்க உடனடியாக நட வடிக்கை எடுக்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி, சகல மாவட்டங்களிலும் உள்ள செயலாளர்களின் ஊடாக இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச நிர்வா கம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மாயாதுன்னைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அனர்த்த நிலைமைகளுக்கு முழுமையாக தயாராகி மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# இலங்கைக்கான பயண ஆலோசனை; கட்டுப்பாட்டை தளர்த்தியது கனடா!

ஒட்டாவா, செப். 07

இலங்கைக்கான பயண ஆலோசனையில் கனடா தளர்வை ஏற்படுத்தியுள்ளது. அந்நாட்டு பயணம் செல்வதற் கான நாடுகளில் இலங்கை செம்மஞ்சள் பட்டியலில் இருந்து மஞ்சள் நிற பட்டிய லுக்கு மாற்றப்பட்டுள்ளது.

முன்னதாக இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணங் களை தவிர்க்குமாறு கனடா தமது நாட்டு பிரஜைகளுக்கு அறிவுறுத்தியிருந்தது. இதனை தற்போது தளர்த்தி அதிக அவதானத்துடன் செயல்படு மாறு தமது நாட்டு பிரஜைக ளுக்கு கனடா தெரிவித் துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னர் பிரான்ஸ், சுவிற்சர் லாந்து, பிரித்தானியா மற்றும் நோர்வே உட்பட பல ஐரோப் பிய நாடுகள் இலங்கைக்கான பயண கட்டுப்பாடுகளை தளர்த் தியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

# அனுபவமுடைய தாதிய சேவையினரை மருத்துவர்களாக உள்ளீர்க்க வேண்டும்!

### யாழ். போதனா மருத்துவமனை பிரதி பணிப்பாளர்

யாழ்ப்பாணம், செப். 07

தாதிய சேவையில் 10 வரு டங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களை விசேட தகுதி காண் பரீட்சை மூலம் - குறிப் பாக 40 வயதுக்கு உட்பட்ட வர்களை மருத்துவமானிப் பட்டப்படிப்புக்கு உள்வாங்கும் செயல் திட்டத்தை உருவாக் குதல் அவசியம் - என்று யாழ். போதனா மருத்துமவனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப் பில் கொரோனாப் பெருந் தொற்றும் அதன் பின்னரான உலக பொருளாதார நெருக் கடியும் மருத்துவ சேவையை நேரடியாகவும் மறைமுகமாக வும் பாதித்துள்ளது. இதனால் மருத்துவர்களை பல்கலைக் கழகங்கள் உருவாக்கும் அளவு குறைவாகவும் பெருமளவான மருத்துவர்கள் அதிக வருமா னம் கிடைப்பதற்காக புலம் பெயரும் வீதமும் அதிகரித் துள்ளது.

இந்நிலையில் ஓய்வு பெறும் மருத்துவர்களின் வயதெல் லையை நீடிப்பதனால் நீண்ட தீர்வு கிடைக்காது. மாறாக இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ளது போல் தாதிய சேவை யில் 10 வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களை - குறிப்பாக, அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் சிகிச்சைப் பிரிவு என்ப வற்றில் அனுபவம் உள்ளவர் களை விசேட தகுதிகாண் பரீட்சை மூலம் குறிப்பாக 40 வயதுக்கு உட்பட்டவர்களை மருத்துவமானிப் பட்டப்படிப் புக்கு உள்வாங்கும் செயல் திட் டத்தை உருவாக்குதல் அவ சியம்.

இதனால் எதிர்வரும் காலங் களில் ஏற்படக் கூடிய மருத்துவ ஆளணிப் பிரச்னையை இலகு வாகக் கையாளலாம். இலங்கை யில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்படவுள்ளது. எனவே, இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சாதகமான முடிவை எடுத்தல் அவசியம் -என்றுள்ளது. (ஐ-3)

ஈழநாடு
Eelanadu
07.09.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜெனிவா அரசியல்?

மீண்டும் ஜெனிவாவுக்கு போகும் அரசியல் சுற்றுலா ஆரம்பித்திருக்கின்றது. 2012இல், இலங்கைமீதான அமெரிக்க பிரேரணை கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல பிரேரணைகள் இலங்கைமீது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரேரணைகளை மேற்குலக ஆதரவு பிரேரணைகள் என்றும் கூறலாம். ஏனெனில், இது வரை நிறைவேற்றப்பட்ட அனைத்து பிரேரணைகளும் மேற்குலகின் தலையீட்டின் காரணமாகவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேற்குலக தாராளவாத நாடுகளின் ஆதரவில்லாது போனால் இலங்கைமீதான பிரேரணைகள் விவகாரம் எப்போதோ முடிந்துபோன விடயமாகியிருக்கும்.

2012இல், அமெரிக்க பிரேரணை நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து ஈழத் தமிழ்த் தேசிய அரசியலில் ஜெனிவா என்னும் சொல்லும் புதிதாக சேர்ந்து கொண்டது. அதுவரையில் தாயகம், தேசியம், சுய நிர்ணயம் போன்ற சொற்கள் போன்று, ஜெனிவா விடயமும் பிரதானமான ஒன்றானது. ஒவ்வோர் ஆண்டும் ஜெனிவாவுக்கு செல்வதை ஒரு கடமையாகவே சில அரசியல்வாதிகளும், புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பின்பற்றி வருகின்றனர்.

ஆனால், இவர்கள் அங்கு சென்று எவ்வாறான விடயங்களை முன்னெடுக்க முடிந்தது - என்பதை உற்று நோக்கினால், குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமிருக்காது. ஏனெனில், தமிழ் அரசியல்வாதிகள் தலையிடுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதானவை. ஒருவேளை கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்புக் கிடைத்தாலும்கூட, ஒரு சிவில் சமூக பிரதிநிதியாகவே அங்கு பேச முடியும். கடந்த பத்து வருடங்களாக ஜெனிவாவுக்கு சென்று வந்தவர்கள் அனைவருமே சிவில் சமூக பிரதிநிதிகளுக்கான சொற்ப நிமிடங்களில் உரையாற்றிவர்கள்தான். ஏனெனில், அரசியல்வாதிகளாக மனித உரிமைகள் பேரவையில் பங்குகொள்ள முடியாது. ஆனால், பக்க நிகழ்வுகளை மேற்கொள்ளலாம். இது மனித உரிமைகளுக்கான 'லொபி' என்னும் வகைக்குள் அடங்கும். ஆனால், இதனையும் தமிழ்த் தரப்புக்கள் ஒரு பொது நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் முன்னெடுக்கவில்லை. இன்றுவரையில் தாயக மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் அனைவரும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் வகுக்கப்படவில்லை.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் தங்களுடைய தேர்தல் அரசியலுக்கான மூலதனமாகவே ஜெனிவாவைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. இதன் காரணமாகவே பல கடிதங்கள் ஆண்டுகள் தோறும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மறுபுறமாக, ஜெனிவா மூலமான - இதுவரையான அரசியல் தாக்கங்களை நோக்கினால், தமிழர்கள் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை. ஆகக் குறைந்தது அதற்கான வலுவான அழுத்தங்களையும் இலங்கைமீது திரட்சி பெறச் செய்ததாகவும் கூறிவிட முடியாது. ஆனால், இலங்கைத் தீவை சர்வதேச ரீதியில் பேசு பொருளாக பேணிக் கொண்டிருப்பதில் ஜெனிவா தலையீடுகளே பிரதான காரணமாகும். ஆனால், இதற்கான உரிமையை பங்குபோடுவதில் நமது அரசியல் கட்சிகள் முட்டி மோதிக் கொள்வது நகைச்சுவையானது. தமிழ் கட்சிகள் அமைதியாக இருந்தாலும்கூட, ஜெனிவா அழுத்தங்களை முற்றிலுமாக நீர்த்துப்போக அமெரிக்காவும் மேற்குலகும் அனுமதிக்கப் போவதில்லை. ஆனால், இந்த அழுத்தங்கள் ஏற்றஇறக்கங்களை கொண்டவை என்பதை தமிழ்த் தேசிய தரப்புக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜெனிவா அழுத்தங்கள் வெற்றியளிக்காவிட்டால் இந்தியாவும் மேற்குலக நாடுகளும் தான் காரணமென்று தெரிவித்திருந்தார். சர்வதேச அரசியலையும் அதன் இயங்கு நிலையையும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமைதான் இவ்வாறான வெளிப்பாடுகளுக்கான காரணமாகும். இலங்கைமீதான அழுத்தங்கள் என்பவை தமிழ் மக்களின் பிரச்னைகளில் சர்வலோக நிவாரணியல்ல. ஆனால், குறித்த அழுத்தங்கள் சில வாய்ப்புக்களை தரக்கூடியவை. ஆனால், அந்த வாய்ப்புக்கள் கிடைக்கின்றபோது, அதனைப் பயன்படுத்தி நன்மையடைவதற்கு தமிழர் தரப்பு தயாராக இருக்க வேண்டும். அந்த நன்மை என்பது ஒட்டுமொத்த நன்மையாக ஒரு போதுமே இருக்காது. படிப்படியாகத்தான் தமிழர்கள் முன்னகர முடியும். எனவே, ஜெனிவா அழுத்தங்கள் என்பவை படிப்படியாக முன்னகர்வதற்கான ஒரு துருப்புச்சீட்டு மட்டுமேயாகும்.

# ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு சவால்விடும் அரசு!

**அலசுவது இராஜதந்திரி**



*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு வார காலமே இருக்கும் தறுவாயில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி வெளிநாட்டு பொறிமுறையை அரசு ஒருபோதும் ஏற்காது என்று குறிப்பிட்டுள்ளார். மறுபுறத்தே இதன்காரணமாக சர்வதேச சமூகமும் மனித உரிமை மீறல்கள் குறித்த இலங்கை மீதான குற்றச்சாட்டுகளை இலகுவில் ஒதுக்கிவிடப் போவதில்லை என்பதையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிய வேண்டியவராகின்றார்.*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கையில் கடந்த காலங்களில் போர் குற்றச்சாட்டுகள் என்று கருதப்பட்டவை தொடர்பாக நீதி விசாரணைக்கான ஒரு பொறிமுறையை உருவாக்கி நல்லிணக்க செயல்பாடுகளை பலப்படுத்தும் விதத்திலேயே இலங்கை குறித்த தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியிருந்தது.*

*ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கே சவால்விடும் விதத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிநாட்டு பொறிமுறையை இலங்கையின் போர் குற்றங்கள் என்று குறிப்பிட்டவை தொடர்பாக ஏற்கப்போவதில்லை என்று கூறியுள்ளார். சர்வதேச சமூகத்துடனும் இலங்கை சவால்விடும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதையே இவ்வாறு அறிய முடிகின்றது. இதன்மூலம் இலங்கை தனது தலையில் தானே மண்ணை வாரிப்போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.*

*நல்லிணக்கத்துக்கான யோசனைகள் உட்பட போர் குற்றங்கள் என்று கருதப்பட்டவை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் விதத்திலேயே நீதி விசாரணைக்கான சர்வதேச பொறிமுறை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது இலங்கை குறித்த தீர்மானங்களில் கொண்டு வந்திருந்தது.*

*ஆனால், இதுவிடயத்தில் முழுமையாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றாதிருப்பதோடு போர்க் குற்றங்கள் என்று கருதப்பட்டவை தொடர்பாகவும் சர்வதேச பொறிமுறையோடு கூடிய விசாரணைகளை மேற்கொள்வதில் இலங்கை தாமதங்களுக்கு இடமளித்துள்ளது. இதன் மூலம் இலங்கை சர்வதேச சமூகத்தால் வெகுவாகவே குறைத்து மதிப்பிடப்படும் ஒரு நிலையை உருவாக்கி வருவதோடு நல்லிணக்க செயல்பாடுகளில் போதிய உத்வேகத்தை காட்டாதிருப்பதையும் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது.*

*இலங்கையின் ஆட்சியாளர்கள் நாட்டு மக்கள் அனைவராலும் நம்பத்தகாதவர்களாக இருப்பதையும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அவர்களின் தவறான ஊழல், மோசடிகள் நிறைந்த அரச நிர்வாகங்களே முக்கிய காரணங்கள் என்பதுவும் சர்வதேச சமூகம் முன்பாக நிரூபணமாகியுள்ளது.*

*வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இலஙகையில் போர்க் குற்றங்கள் என்று கருதப்பட்டவை தொடர்பாக சர்வதேச நீதிப் பொறிமுறையொன்றை இலங்கை ஏற்கப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், இத்தகைய நீதிப்பொறிமுறை ஒன்றை இலங்கை ஏற்காத வரை சர்வதேச சமூகம் முன்பாக இலங்கை தனது செல்வாக்கை பெரிதும் இழக்கும் நிலையே உருவாகும் என்பதை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிந்து கொள்ள வேண்டியவராகின்றார்.*

*ஏற்கனவே, பொருளாதார நெருக்கடியால் இலங்கை துவண்டு போயுள்ளது. அத்துடன், "பிச்சாடனர்" கோலத்தில் இலங்கை சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைக்குமுள்ளாகி வருகின்றது.*

*தற்போதைய சர்வதேச நிலவரங்களைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தின் உதவி ஒத்தாசை என்பவற்றைப் பொறுத்தவரை அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களும் முன்னிலைப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன.*


*சர்வதேச சமூகம் இலங்கையை அனுதாப கண்கொண்டு பார்க்கும் நிலையே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இலங்கையின் மனித உரிமைகளை மேம்படுத்தும் விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், இந்தத் தீர்மானங்களையும் இலங்கை புறக்கணிக்கும் பட்சத்தில் இலங்கை பொருளாதார ரீதியான மேம்பாடுகளையும் எதிர்பார்க்க முடியாது.*

*அத்துடன், தனது பொருளாதார உறுதிப்பாட்டுக்காக உலக நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர்ந்த வடக்கு - கிழக்கு தமிழர்களையும் இலங்கை எதிர்பர்க்கின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.*

*புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.*

*இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு உரிய முக்கியத்துவத்தை வழங்காதவரை இக்கட்டான தருணங்களுக்கு இலங்கை தன்னை வழி நடத்திச்செல்லும் என்றே கருத முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
வருமானம் அதிகரிக்கும். நிதி நிலையில் இருந்த நெருக்கடிகள் விலகும். செயலில் ஆதாயம் காண்பீர்கள். நீண்ட நாட்களாக நிறைவேறாமல் இருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும்.

**இடபம்**
இன்று நீங்கள் எதிர்பார்த்த பலன்களை அடைய முடியாமல் போகும். உங்கள் முயற்சியில் இன்று பின்னடைவுகள் ஏற்படும். எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். செயல்களில் கவனம் தேவை.

**மிதுனம்**
உங்கள் செயல்களில் ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் உதவி செய்வார்கள். நீங்கள் விரும்பும் வகையில் செயல்பட்டு லாபம் காண்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். ஆற்றல் வெளிப்படும்.

**கடகம்**
தடைகளைத் தாண்டி முயற்சியில் வெற்றி அடைவீர்கள். பிறரால் மதிக்கப்படுவீர்கள். உங்களை எதிர்த்து செயல்பட்டவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள். சாதகமான நிலை உண்டாகும்.

**சிம்மம்**
முயற்சிகள் வெற்றியாகும். உங்களின் செல்வாக்கு வெளிப்படும் நாள். பிறரால் சாதிக்க முடியாத ஒன்றை நீங்கள் சாதிப்பீர்கள். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**கன்னி**
மனம் காட்டும் வழியில் செல்வீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள். நீண்ட நாள் விருப்பம் ஒன்று நிறைவேறும். வரவுகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்**
நீங்கள் நினைத்ததை அடைந்து மகிழ்வீர்கள். நெருக்கடிகள் இருந்தாலும் நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.

**விருட்சிகம்**
சேமிப்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். புதிய வேலைக்காக நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.

**தனுசு**
உங்கள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். செயலில் நீங்கள் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். நெருக்கடிகளால் சங்கடப்படுவீர்கள்.

**மகரம்**
எதிர்பாராத செலவுகளால் சங்கடப்படுவீர்கள். வரவை விட செலவு கூடும். உங்களின் செல்வாக்கை வெளிக்காட்டுவதற்காக செலவுகள் செய்வீர்கள். நீண்ட நாள் விருப்பம் ஒன்று நிறைவேறும்.

**கும்பம்**
உங்கள் முயற்சி எளிதில் வெற்றியாகும். நிதிநிலை உயரும். பழைய முதலீட்டில் இருந்து லாபம் வரும். பொன் பொருள் சேர்க்கையில் கவனம் செல்லும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். பணியிடத்தில் உண்டான நெருக்கடிகளை சரி செய்வீர்கள். சிலருக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள்.

# சிவாஜி கணேசன் சிலையை திறக்க அனுமதிக்காவிடின் நானே திறப்பேன்!

## நாம் தமிழர் சீமான்


சென்னை, செப். 07

திருச்சி பாலக்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சிலையைத் திறப்பதற்கு, தமிழ்நாடு அரசு உடனடியாக அனுமதியளிக்க வேண்டும். மேலும் தாமதித்தால் அவருடைய பிறந்தநாளான ஒக்ரோபர் முதலாம் திகதி அவரின் ரசிக பெருமக்களின் முன்னிலையில் நான் முன்னின்று சிலையை திறப்பேன்” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் ரசிகர் பெருமக்களால் திருச்சி மாநகர் பாலக்கரை பகுதியில் கடந்த 2011ஆம் ஆண்டுப் பெரும் பொருட்செலவில் அமைக்கப்பட்ட சிலையைத் திறக்க பலமுறை முயற்சித்தும் பத்தாண்டுகால அ. தி. மு. க. ஆட்சியில் அனுமதி தரப்படவில்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒன்றரை ஆண்டுக



ளாகியும் தி. மு. க. அரசும், கடந்த அ. தி. மு. க. அரசைப் போலவே சிலையைத் திறக்க அனுமதி மறுப்பது உலகெங்கும் உள்ள அவரது ரசிகர்கள் மட்டுமின்றி, தமிழ் மக்கள் அனைவரிடமும் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது“ என்றும் கூறியுள்ளார். (ஐ)

# அ. தி. மு. க. பொதுக் குழு விவகாரம் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு!

## பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்

சென்னை, செப். 07

அ. தி. மு. க. பொதுக்குழு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஓ.பன்னீர் செல்வம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.



அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தை எதிர்த்து ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ‘சென்னையில் கடந்த ஜூலை 11-இல் நடைபெற்ற அதிமுக பொதுக் குழு கூட்டம் செல்லாது. அ. தி. மு. க. வில் கடந்த ஜூன் 23-ஆம் திகதிக்கு முன்பு இருந்த நிலையே நீடிக்க வேண்டும்’ என்று ஒகஸ்ட் 17-ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக எடப்பாடி பழனி சாமி உயர்நீதிமன்றில் தொடர்ந்த வழக்கில், கடந்த ஜூலை 11 ஆம் திகதி நடைபெற்ற அதிமுக பொதுக் குழு கூட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்தது.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பை எதிர்த்து பன்னீர்செல்வம் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் நேற்று மேல் முறையீடு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# காஷ்மீருக்கு நடை பயணம் இன்று ஆரம்பிக்கிறார் ராகுல்

நாகர்கோவில், செப். 07

கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி இன்று புதன்கிழமை நடை பயணம் தொடங்குகிறார். குமரியில் நடைபெறும் தொடக்க விழா நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்.

இந்நிலையில், இந்த விடயம் குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே.எஸ். அழகிரி விடுத்துள்ள அறிக்கையில்,

ராகுல்காந்தி எம்.பி. நாளை (இன்று) கன்னியாகுமரியில் தொடங்கி காஷ்மீர் வரை 3,500 கி.மீ. தூர 150 நாட்கள் இந்திய ஒற்றுமை பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார். இப்பயணத்தின்போது மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்னைகளுக்குத் தீர்வு காண்கிற முயற்சியில் இப்பயணம் அமைக்கப்பட்டிருக்



கிறது. இந்தியாவை கண்டுணர்கிற முயற்சியே இப்பயணம்.

இந்தியாவின் சுதந்திரம், இறையாண்மை, அரசியலமைப்புச் சட்டம், ஜனநாயக அமைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், இந்திய ஒற்றுமை பயணத்தில் அனைவரும் இணைய அழைக்கிறோம். -என்றுள்ளது. (ஐ)

# புலிகளுக்கு ஆதரவாக யாரும் செயல்படவில்லை!

## அமைச்சர் ரகுபதி



புதுக்கோட்டை, செப். 07

“விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக, தமிழகத்தில் யாரும் செயல்படவில்லை,” என, சட்டத் துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர், தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலை புலிகளுக்கு ஆதரவாக, தமிழகத்தில் யாரும் செயல்படவில்லை. எச். ராஜா உண்மையை பேச மாட்டார் அவர், 90 சதவீதம் பொய் தான் பேசுவார். இருப்பினும், முதல்வரின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய விசாரணை நடத்தப்படும்.

விசாரணையில், அவர் கூறியது உண்மை என்றால் சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இல்லாவிட்டால் எச். ராஜா மீது நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு செய்யப்படும்- என்றார். (ஐ)

# அரசாங்க திட்டங்களை மீளாய்வு செய்யக் குழு

கொழும்பு, செப். 07

இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு வசதியாக நிறுவப்பட்டுள்ள திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட முகாமைத்துவப் பிரிவுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கே.டி கமல் பத்மசிறி தலைமையிலான இக்குழுவில் என். கே.ஜி.கே. நெம்மவத்தை, ஆர். எச். ருவினிஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை துரிதமாக முன்னெடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக , ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினால் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளமை.

- திட்ட அலுவலகங்கள் ஃ திட்ட முகாமைத்துவ பிரிவுகளில் நிறைவேற்றப்படக்கூடிய பணிகளை அந்தந்த அமைச்சு / திணைக்களம் / நிறுவனத்தினால் நிறைவேற்ற முடியுமா என ஆராய்தல்.
- திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என ஆராய்தல்.
- திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகள் தற்போது முன்னெடுத்து வரும் பணிகளின் தன்மை காரணமாக அவர்களே அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமா என ஆராய்தல்.
- திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகளில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக உள்ளதா என ஆராய்தல்.
- தற்செயலாக அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்கள் உள்ளனவா என ஆராய்தல்.குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை 15.11.2022 க்கு முன்னர் சமர்ப் பிக்கப்படும். (அ)

# அரச ஊழியருக்கு 5 ஆண்டுகள் சம்பளமற்ற உள்ளூர் விடுமுறை

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, செப். 07

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்சமாக 05 வருடங்கள் வரை சம்பளம் இல்லாத உள்ளூர் விடுமுறையை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசு அலுவலர்களுக்கு பணி மூப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் உள்ளூர் விடுப்பு வழங்குவது தொடர்பான பரிந்துரைகளை வழங்க மூத்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஜூன் மாதம் நியமிக்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

இதன்படி, பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஊதியம் இல்லாத விடு முறையை அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை வழங்குவது தொடர்பாக குழு அளித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# மீனின் விலை 50 வீதத்தால் குறையும்

கொழும்பு, செப். 07

எதிர்வரும் நான்கு நாட்களில் மீன் விலை 50 சதவீதத்தால் குறைவடையக் கூடும் என பேலியகொடை மெனிங் சந்தையின் மொத்த மீன் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சந்தையில் மீன் விலை அதிகரித்து காணப்படுகின்ற போதிலும் எதிர்வரும் காலங்களில் அதன் விலை குறைவடையக் கூடும் என அந்த சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்தார். (அ)

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பணிப்புரை

கொழும்பு, செப். 07

நாட்டில் பெய்துவரும் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கு முன்கூட்டியே தயாராகுமாறும் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன மற்றும்அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# பேராதனையில் மதில் இடிந்து ஒருவர் மரணம்!

கொழும்பு, செப். 07

சீரற்ற காலநிலையினால், பேராதனை - தவுலகல பிரதேசத்தில் மதிலொன்று இடிந்து வீழ்ந்து, நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# பளை பகுதியில் 1840 ஏக்கர் காணி இராணுவத்துக்குத் தாரைவார்ப்பு!

## அமைச்சரவை ஒப்புதலுக்குப் பத்திரம் நகர்த்தல்

கிளிநொச்சி, செப். 07

**கிளிநொச்சி மாவட்டம், பளைப் பகுதியில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணியில் இராணுவத்தினர் பண்ணை அமைக்க 1,840 ஏக்கர் நிலம் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதலுக்குப் பத்திரம் நகர்கின்றது.**

காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு பளைப் பகுதியில் தற்போது 4 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 1,840 ஏக்கர் நிலம் விவசாய அமைச்சின் கீழ் இயங்கிய மக்கள் பெருந்தோட்டச் சபைக்கு 1988 இல் வழங்கியதாக அந்தச் சபை உரிமை கோரி வருகின்றது.

பெருந்தோட்டச் சபைக்கு 1988 இல் 1,840 ஏக்கர் நிலம் வழங்கியதற்கான ஆவணமோ- சான்றுகளோ அந்தச் சபையிடமோ அல்லது ஆணைக்குழுவிடமோ இல்லாத சூழலிலும் சபை உரிமை கோரி வருவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அந்தச் சபையின் பெயரில் நிலத்தை மாற்றி, இராணுவத்தினர் மூலம் அங்கு பெரும் பண்ணை அமைப்பதற்கு 1,840 ஏக்கரையும் சபையின் ஊடாக இராணுவத்தினருக்கு வழங்க எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் விவசாய அமைச்சு மற்றும் காணி அமைச்சு என் பன இணைந்து முன்னெடுப் பது தற்போது தெரியவந்துள்ளது. (அ)

# கிளைபோசேட் இறக்குமதிக்கு கோப் குழு அனுமதி கிடைத்தது

கொழும்பு, செப். 07

பெருந்தோட்டத் துறையில் களை கொல்லியாகப் பயன்படுத்தப்படும் கிளைபோசேட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் 1969ஆம் ஆண்டு 01ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு அண்மையில் கூடியபோதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய இந்த ஒழுங்கு விதிகள் அடங்கிய 2291/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பூச்சிகொல்லிகள் பதிவாளர் நாயகத்தின் பரிந்துரையின் கீழ் கிளைபோசேட் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படவுள்ளது.

இந்த ஒழுங்குவிதிக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டாலும், அது நிபந்தனைக்கு உட்பட்டதாகவே வழங்கப்படுகிறது என இக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் அரசாங்க நிதி பற்றிய குழுவின் பரிந்துரைக்கு அமைய இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்கள் தொடர்பில் இந்த கிளைபோசேட் பயன்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை அடுத்துத் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்றை நடத்திய பின்னர் எதிர்கால தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பாராளுமன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ள சட்டமூலங்கள் மற்றும் ஏனைய துணைச் சட்டங்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு முற்கூட்டியே வழங்கப்பட வேண்டும் என்றும், அவை குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் மாத்திரமே அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பெருந்தோட்டத்துறையில் களை கொல்லியாகப் பயன்படுத்தப்படும் கிளைபோசேட் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய சுகாதார தாக்கங்களைக் கருத்தில் கொண்டு கிளைபோசேட் இறக்குமதி தடை செய்யப்பட்டாலும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிக்குக் காணப்படும் தடைகள் மற்றும் வெலிகம தென்னோலைகள் பாதிக்கப்படும் நோயை ஒழிப்பது போன்ற காரணங்களுக்காக வரையறுக்கப்பட்ட வகையில் கிளைபோசேட் இறக்குமதி செய்யப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இதனால் ஏற்படக்கூடிய சுகாதார மற்றும் சூழலியல் தாக்கங்கள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதற்கமைய இது தொடர்பில் எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடலை நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் அவசியம் குறித்தும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், எம்.ஏ. சுமந்திரன், ஷெஹான் சேமசிங்க, பிரமித்த பண்டார தென்னக்கோன், சுரேன் ராகவன், ஹர்ஷன ராஜகருணா, சமிந்த விஜயசிறி, கௌரவ அநூப பஸ்குவல், (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார ஆகியோர் இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், நிதி அமைச்சு, ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், பெருந்தோட்ட அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் பூச்சிகொல்லிகள் பதிவாளர் நாயக அலுவலகத்தின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருந்ததுடன், சுகாதார அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் ஒன்லைன் ஊடாக இணைந்திருந்தனர். (அ)

# பாண் விலை 350 ரூபாவாகலாம்

கொழும்பு, செப். 07

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 450 ரூபாவை கடந்தால், பாண் ஒன்றின் விலையை 350 ரூபாவாக அதிகரிக்க நேரிடும் என உணவக உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பாண் விற்பனை செய்வதன் ஊடாக தொடர்ந்தும் நட்டத்தை எதிர்நோக்குவதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, எதிர்வரும் நான்கு நாட்களில் மீன் விலை 50 சதவீதத்தால் குறைவடையக் கூடும் என பேலியகொடை மெனிங் சந்தையின் மொத்த மீன் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சந்தையில் மீன் விலை அதிகரித்து காணப்படுகின்ற போதிலும் எதிர்வரும் காலங்களில் அதன் விலை குறைவடையக் கூடும் என அந்த சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே கூறினார். (அ)

# சுதந்திரக் கட்சியில் ஜனநாயகம் இல்லை

## சந்திரிக்கா தெரிவிப்பு

கொழும்பு, செப். 07

**சுதந்திரக் கட்சியில் தற்போது ஜனநாயகத் தன்மை அழிக்கப்பட்டுள்ளதாகவும் அனுபவம் இல்லாதவர்களே தற்போது கட்சியில் இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான நவ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள்.

மக்களிடம் வாக்குகளை பெற்றுவிட்டால் தாங்கள் எண்ணியதை செய்ய முடியும் என நினைக்கின்றனர்.

அவர்களுக்கு எதிராக கருத்துக்களை முன்வைப்பவர்களை கொலை செய்கின்றனர் அல்லது வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று பிரச்னையை கொடுக்கின்றனர்.

69 லட்சம் பேர் வாக்களித்த போதிலும் அவர்களில் 90 சதவீதமானோர் முன்னாள் ஜனாதிபதியை பதவியிலிருந்து விலகுமாறு வலியுறுத்தினர்.

நாடு முழுமையாக கொள்ளையிடப்பட்டுள்ளது- என்றார். (அ)

# பிறப்புச் சான்றிதழ்கள் இனி டிஜிற்றல் வடிவில்!

கொழும்பு, செப். 07

இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம் பிறப்புச் சான்றிதழ்களை தற்போது டிஜிற்றல் வடிவில் வழங்கி வருகிறது.

2022 ஒகஸ்ட் முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்த மற்றும் பிறக்கும் குழந்தைகள் டிஜிற்றல் வடிவிலான பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவார்கள் என பதிவாளர் ஜெனரல் பிரபாத் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் திட்டம் வருட இறுதியில் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும் பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

குழந்தை 15 வயதை அடையும் போது, டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழில் அவர்களின் பெயருக்கு அடுத்ததாக பட்டியலிடப்பட்ட எண் அவர்களின் தேசிய அடையாள அட்டை எண்ணாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ளதுடன், பதிவாளர் நாயகத்தின் கருத்தின் பிரகாரம், ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மொழி மாற்றங்களை அனுமதிக்கும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

# ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதில் சவால்!

## அமைச்சர் காஞ்சன கூறுகிறார்

கொழும்பு, செப். 07

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதில் இலங்கை பல சவால்களை எதிர்நோக்குவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.



எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு உள்ள தடைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் தற்போதைய நிதி நிலை, எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு பணம் செலுத்தத் தவறியமை நாட்டின் வங்கி அமைப்பில் இருந்து கடன் கடிதங்களை திறக்க முடியாமை அதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்ய 12 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு கட்டளைகளுக்கான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த 3 மாதங்களுக்குள் எந்த நிறுவனமும் எங்களிடம் முன்பதிவு செய்யவில்லை என அமைச்சர் தெரிவித்தார். (அ)

# ஜனவரி-ஓகஸ்ட் வரையான காலத்தில் வவுனியாவில் அதிகளவு மழை வீழ்ச்சி

வவுனியா, செப். 07

வுனியாவில் இவ்வருடம் ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் 931.2 மில்லி மீற்றர் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வருடம் 2022 ஜனவரி முதலாம் திகதியிருந்து ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 931.2 மில்லி மீற்றர் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் குறித்த காலப் பகுதி யில் ஏப்ரல் மாதம் 356.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச் சியே அதிக மழைவீழ்ச்சியாக பதியப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் பெய்த மழைவீழ்ச்சி 667.1 மில்லிமீற்றராக காணப்பட்டுள்ளது.

இருப்பினும் கடந்த வருடம் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒப்பிடும் போது கடந்த வருடத்தை விட இவ்வருடமே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த வருடம் குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டுமே மழை பெய்ததாகவும் ஆனால் இந்த வருடம் தொடரான மழை வீழ்ச்சி காணப்பட்டதாலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது.

இனிவரும் காலப்பகுதியில் பெய்யும் மழை சாதாரண மழையாகவே காணப்படும். நவம்பர், டிசம்பர் மாதங்களில் மழை அதிகமாக காணப்பட்டாலும் சராசரி மழைவீழ்ச்சியாகவே காணப்படும்-என்றார். (அ)

# அமரர் அமரகீர்த்தி அத்துகோரளவின் குடும்பத்தாரை சந்தித்தார் ஜனாதிபதி



கொழும்பு, செப். 07

நிட்டம்புவ பிரதேசத்தில் கடந்த மே 09 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தனர்.

குறித்த சம்பவத்திற்கு தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க , பிள்ளைகளின் கல்வி உள்ளிட்ட குடும்ப நல விடயங்கள் குறித்து கேட்டறிந்ததோடு, பிள்ளைகளுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தமக்கு அறிவிக்குமாறு கூறினார்.

அந்த பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் குடும்ப நலனுக்காகவும் அரசாங்கத்தின் நன்கொடையின் ஊடாகவோ தனிப்பட்ட முறையிலோ எந்தவொரு உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் உயிரிழந்த அமரகீர்த்தி அத்துகோரளவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் பொலிஸ் சார்ஜன்ட் ஜயந்த குணவர்தனவின் சார்பில் பொலிஸ் வெகுமதி நிதியிலிருந்து ஜனாதிபதியினால் நிதியுதவி வழங்கப்பட்டமையும் நினைவூட்டத்தக்கது. (அ)

# உரக் கப்பல் விவகாரத்தினால் இலங்கை-சீன உறவில் விரிசல்

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, செப். 07

உரக்கப்பல் தொடர்பான பிரச்னையே சீனாவுடனான உறவில் விரிசலை ஏற்படுத்தியதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



வெளிவிவகார அமைச்சரின் தலையீட்டின் பேரில் முறையான தீர்மானங்களை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன உரக் கப்பல் தொடர்பான பெரும் பிரச்னை ஒன்றுக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். ஒருபுறம், சர்வதேச அளவில் பிரச்னையை எவ்வாறு தீர்ப்பது என்பதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். சீனாவுடனான நல்லெண்ணத்தை சேதப்படுத்தியதற்கு முக்கிய காரணம் இந்த சீன உரக்கப்பல் தொடர்பானது என்று நான் நினைக்கிறேன். யார் மூலம் தவறிழைக்கப்பட்டிருந்தாலும், தற்போது அதற்கான இழப்பீட்டை நாடு செலுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சர் தலையிட்டு, நல்லெண்ணத்தை முன்னெடுப்பதன் மூலம் நியாயமான முறையில் எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து, கடந்த வாரம் நிதிக் குழு, விவசாய அமைச்சிடம் முன்மொழிவு செய்ய முடிவு செய்தது-என்றார். (அ)

# எட்டு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப். 07
சீரற்ற வானிலை தொடரும் நிலையில் கொழும்பு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை, கேகாலை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மா ஓயாவின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மா ஓயாவை அண்டிய பகுதிகளில் உள்ள வர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# மத்திய வங்கியின் ஆளுநரை பதவி நீக்கும் தேவை இல்லை

## சபையில் கூறினார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, செப். 07

**மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.**

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்று ப்பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

மத்திய வங்கி ஆளுநரை பதவி நீக்கம் செய்ய தங்களுக்கு விருப்பம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.



நந்தலால் வீரசிங்க முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார் என குறிப்பிட்ட அவர், தற்போதைய ஜனாதிபதி அவரது பதவிக்காலத்தை நீட்டித்தார் எனவும் கூறினார்.

அத்துடன், மத்திய வங்கி ஆளுநரை பதவி நீக்கம் செய்ய முயல்வதாக எதிர்க்கட்சியினர் இந்த நாட்டுக்கு காட்ட முயற்சிக்கின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சியினருக்கு அப்படி ஒரு ஆசை இருக்கிறதா என தெரியவில்லை எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (அ)

# அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு மேலும் இரு எம்.பிக்கள் நியமனம்

கொழும்பு, செப். 07
அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற குழுவுக்கு மேலும் இரண்டு எம்.பி.க்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பொது ஜன பெரமுனவின் காலி மாவட்ட எம்.பி. சந்திம வீரக்கொடி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட எம்.பி. மயந்த திசநாயக்க ஆகியோர் குறித்த குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# வெளிநாட்டில் வேலை தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்ட பெண் சிக்கினார்!

கொழும்பு, செப். 07
ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜகிரிய, மெத வெலிக்கடை வீதி பகுதியில் குறித்த பெண் தனது நிறுவனத்தை நடத்தி வந்துள்ளார்.

குறித்த பெண் கைது செய்யப்பட்டபோது குறித்த இடத்தில் 23 வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் மற்றும் பல ரோமானிய வேலை விண்ணப்பங்களையும் கண்டுபிடித்தனர்.

ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி சந்தேகநபர் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் இவ்வாறான செயற்பாடுகளுக்காக ஏற்கனவே நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கொழும்பு இலக்கம் 05 நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், 500,000 ரூபா ரொக்கப் பிணையிலும், 10 இலட்சம் ரூபா இரண்டு சரீரப் பிணைகளிலும், கடுமையான பிணை நிபந்தனைகளிலும் விடுவிக்கப்பட்டதுடன், வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# கோதுமை மா தட்டுப்பாடு; 2,000 பேக்கரிகளுக்கு பூட்டு

கொழும்பு, செப். 07
கோதுமை மா தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாடளாவிய ரீதியில் 2000 இற்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 7,000 பேக்கரிகளில் சுமார் 2,000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள பேக்கரிகள் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருவதாகவும் அவர் கூறினார். (அ)

# அவுஸ்திரேலியா செல்வதற்காக கேரளாவில் தங்கியிருந்த 11 இலங்கைத் தமிழர்கள் கைது!

புதுடில்லி, செப். 07
சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல திட்டமிட்டுள்ளதாக தமிழக காவல்துறையினருக்கு கிடைத்த தகவலின் பேரில், தெற்கு கேரளாவில் உள்ள கொல்லத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் இருந்து 11 இலங்கையர்களை கேரள பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த வாரம் சுற்றுலா விஸாவில் தமிழகம் சென்ற இரண்டு இலங்கை பிரஜைகள் காணாமல்போனமை கண்டு பிடிக்கப்பட்டதாகவும், கியூ பிரிவு அவர்களின் தொலைபேசி சமிக்ஞைகளைப் பின்தொடர்ந்து கொல்லத்தில் அவர்களைக் கண்டுபிடித்து அங்குள்ள பொலிஸாரை எச்சரித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தேடுதலுக்குப் பிறகு, தமிழ்நாட்டிலிருந்து காணாமல் போன இருவர் உட்பட 11 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒன்பது பேர் அகதிகளாக இந்தியாவுக்குள் நுழைந்து தென் தமிழகத்தின் ராமநாதபுரத்தில் உள்ள மறுவாழ்வு மையத்தில் தங்கவைக்கப்பட்டவர்கள்.

விசாரணையின்போது, அவர்கள் தலா 2.5 லட்சம் ரூபாயை கொழும்பில் உள்ள லக்மன என்ற முகவரிடம் கொடுத்து, இந்தியாவின் தெற்கு கடற்கரையில் இருந்து கப்பல் மூலம் கனடாவுக்குப் பயணம் செய்வதை உறுதி செய்ததாக பொலிஸாரிடம் கூறியதாக கூறப்படுகிறது.

அவர்களிடம் விசாரணை நடத்த தமிழ்நாடு கியூ பிரிவு குழுவும் கேரளா சென்றுள்ளது. (அ)

# கங்கைகளுக்கு அண்மையில் வசிப்போருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 07
தொடர் மழை பெய்துவரும் நிலையில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்குமாயின் அத்தனகல, களு, களனி, கிங் மற்றும் நில்வள கங்கைகளின் நீர் மட்டம் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக குறித்த கங்கைகளை அண்மித்து வாழ்பவர்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நான்கு மாவட்டங்களுக்கு இன்று மாலை 4 மணிவரையில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.குறித்த பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக செயற் படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# 61 ஆயிரம் குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூ.10,000 வழங்கும் உலக உணவுத்திட்டம்!

கொழும்பு, செப். 07
இலங்கையில் அவசர உதவி தேவைப்படும் உணவுப் பாதுகாப்பற்ற 61,000 குடும்பங்களுக்கு ரூ.10,000 மாதாந்திர நேரடி பணப் பரிமாற்றங்களை வழங்க உலக உணவுத் திட்டம் ஒப்புக்கொண்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தனது இடைக்கால வரவு செலவுத் திட்ட உரையில் நான்கு மாத காலத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்குவதற்கான திட்டத்தை அறிவித்தார்.

உத்தேச நலத்திட்டம் குறித்து நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த திறைசேரி அதிகாரிகள், இந்த ஆண்டு இறுதி வரை அவசர நிதி உதவி தேவைப்படும் இந்த அடையாளம் காணப்பட்ட உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு உதவி வழங்க உலக உணவுத் திட்டம் முன் வந்துள்ளதாக தெரிவித்தனர்.

உயர் பணவீக்கம் மற்றும் வருமான இழப்புக்கு மத்தியில், இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு ஆளாகியுள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின்படி, நாட்டின் மக்கள்தொகையில் 33 சதவீதம் அல்லது 7.15 மில்லியன் மக்கள் தற்போது தினசரி குறைந்தபட்ச ஊட்டச்சத்து தேவைக்கு குறைவான உணவை உட்கொள்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஓட்டோக்களுக்கு தனி எரிபொருள் கோட்டா

கொழும்பு, செப். 07
மீற்றர் பொருத்தப்பட்டுள்ள ஓட்டோக்களுக்கு தனியான எரிபொருள் கோட்டா வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனை மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக அதே எரிபொருள் ஒதுக்கீடு வழங்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# “நான் ஆணாக பிறந்திருந்தால்”

# சாதனைப் பெண் செரீனாவின் வேதனைக் கதை!

**- அப்துல் ராஃபிக்**



27 ஆண்டுகால டென்னிஸ் வாழ்க்கை.. 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள்.. 4 ஒலிம்பிக் தங்கப்பதக்கங்கள் என டென்னிஸ் உலகின் முடிசூடா பேரரசியாக வலம் வந்த செரீனா வில்லியம்ஸ் தனது 40-வது வயதில் டென்னிஸ்ஸில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் சாதாரண கருப்பின குடும்பத்தில் பிறந்த செரீனா வில்லியம்ஸ்-ன் இத்தனை சாதனைகளும் அத்தனை எளிதில் கைகூடிவிடவில்லை.

டென்னிஸ் என்றாலே உயர்வர்க்கத்தினருக்கான விளையாட்டு என்ற பொதுப்புத்தி ஊறிப்போயிருந்த காலத்தில் செரீனா வில்லியம்ஸ் வென்ற பட்டங்கள் பல ஏழை நடுத்தர வர்க்க சிறுவர்களின் டென்னிஸ் கனவுகளுக்கு முன்னொடியாக அமைந்துள்ளன என்றால் அதனை யாராலும் மறுக்க முடியாது.



**கருப்பின தந்தையின் கனவு!**

அமெரிக்காவை சேர்ந்த ரிச்சர்டு வில்லியம் என்கிற கருப்பின இளைஞருக்கு 1980 மற்றும் 81-ம் ஆண்டுகளில் வீனஸ் மற்றும் செரீனா ஆகிய 2 பெண் குழந்தைகள் பிறந்தன.

டென்னிஸ் மீது அதீத ஆர்வம் கொண்டிருந்த ரிச்சர்டு தனது 2 மகள்களையும் உலகின் மிகப்பெரிய டென்னிஸ் ஜாம்பவான்களாக மாற்ற வேண்டும் என கனவு கண்டார். அந்த கனவுக்கு தடையாக இருக்கும் என தான் நினைத்த அத்தனை தடைகளையும் தகர்க்க அவர் தயங்கவில்லை.

மனைவி, மகள்களோடு அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் வசித்துவந்த அவர், மகள்கள் டென்னிஸ் விளையாட்டில் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக ஃபுளோரிடா மாகாணத்திற்கு குடிபுகுந்தார்.

வீனஸையும் செரீனாவையும் டென்னிஸ் அகாடெமியில் சேர்த்த ரிச்சர்டு தன்னுடைய வித்தைகளையும் சேர்த்தே அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார்.

**முதல் போட்டியில் தோல்வியை தழுவிய செரீனா!**

1995-ல் தன்னுடைய 14-வது வயதில் கனடாவில் நடைபெற்ற women's tennis association tour போட்டியில் முதன்முதலாக களமிறங்கிய செரீனா தோல்வியை தழுவினார். ஆனால், அதற்குப் பிறகு அவர் பெறப்போகும் வெற்றிகள் குறித்தும் அடையப்போகும் புகழ் குறித்தும் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

வீனஸும் செரீனாவும் தந்தையின் கனவை நிறைவேற்றும் நோக்கில் இரவு பகலாக உழைக்க, யார் முதலில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லப்போகிறார் என்பது குடும்பத்திற்குள் பெரும் போட்டியாகவே இருந்தது. இந்த போட்டிக்கு 1999-ம் ஆண்டு நடந்த யு.எஸ். ஓபன் போட்டியில் பட்டத்தை வென்று தொடக்கப்புள்ளி வைத்தார் செரீனா வில்லியம்ஸ்.

**டென்னிஸ் களத்தில் சாதித்த சகோதரிகள்!**

அதன்பிறகு திரும்பிப் பார்க்க கூட நேரம் இல்லாமல் வெற்றிகளை வாரி குவிக்க தொடங்கிய அவர், 7 முறை ஆஸ்திரேலிய ஓபன், 3 முறை பிரஞ்சு ஓபன், 7 முறை விம்பிள்டன் தொடர், 6 முறை யு.எஸ். ஓபன் என 23 முறை பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வாரிக்குவித்து டென்னிஸ் ஜாம்பவான்களை எல்லாம் வாயடைக்க வைத்தார்.

இதுமட்டுமில்லாமல் தன்னுடைய சகோதரி வீனஸுடன் சேர்ந்து 2000 மற்றும் 2008-ல் நடந்த ஒலிம்பிக் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். 2012-ல் நடந்த லண்டன் ஒலிம்பிக்கில் இரட்டையர் மட்டும் அல்லாது ஒற்றையர் பிரிவிலும் தங்கம் வென்றார் செரீனா வில்லியம்ஸ்.



இந்த காலத்தில் அவரது சகோதரி வீனஸ் வில்லியமும் டென்னிஸ் உலகின் ஜாம்பவானாக உருவெடுத்திருந்தார். ஒருகட்டத்தில், பெண்கள் டென்னிஸ் என்றாலே அதில் செரீனாவும் வீனசும் தான் இறுதிப் போட்டியில் மோதுவார்கள் என்ற நிலை உருவானது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சகோதரிகள் வெற்றிக்காக மோதுவது பார்வையாளர்களுக்கும் சுவாரஸ்யத்தைக் கூட்டியது.

ஒற்றையர் பிரிவில் ஒருவரை ஒருவர் எதிர்த்து களமாடிய சகோதரிகள் இரட்டையர் பிரிவில் ஒன்றாக கைகோர்த்து எதிர் அணியினரை மிரளவைத்தனர். இப்படி இதுவரை இரண்டு பேரும் சேர்ந்து 14 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளனர்.

**கைக்குழந்தையுடன் காதலர் கரம்பிடித்த செரீனா!**

டென்னிஸை தவிர வேறு எதையும் அறிந்திராத செரீனா 2015-ம் ஆண்டு காதலில் விழுந்தார். ரெட்டிட் வலைதளத்தின் இணை நிறுவனர் அலெக்ஸிஸ் ஒஹானியன் செரீனாவின் இதயத்திற்கு வலை வீசினார்.

2016-ம் ஆண்டு இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது. 2017-ல் தான் கர்ப்பமாக இருப்பதாக செரீனா அறிவித்தார். அதே ஆண்டு செப்டம்பர் மாதம் அவருக்கு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த 2 மாதங்களில் காதல் கணவரை கரம்பிடித்தார் செரீனா வில்லியம்ஸ்.

**செரீனா வில்லியம்சின் நிறைவேறாத ஆசை!**

கர்ப்ப காலத்தில் டென்னிஸில் இருந்து விலகி இருந்த செரீனா மீண்டும் 2018-ம் ஆண்டு மைதானத்துக்கு திரும்பினார். 25 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று மார்கெரெட் கோர்ட்டின் சாதனையை முறியடித்துவிட வேண்டும் என்பதே அவரது இலக்காக இருந்தது.

2018 மற்றும் 2019-ம் ஆண்டுகளில் யு.எஸ். ஓபன் மற்றும் விம்பிள்டனில் இறுதிப்போட்டி வரை முன்னேறியும் அவரால் பட்டத்தை வெல்ல முடியவில்லை. ஆனால் ஆறுதல் பரிசாக 2020-ல் நடந்த ABS Classic தொடரில் வெற்றி பெற்றார் செரீனா வில்லியம்ஸ்.

2021-ஐ தனது இலக்கை நோக்கி பயணித்த செரீனா, ஆஸ்திரேலிய ஓபன் அரையிறுதிப்போட்டியில் நவோமி ஓசாகாவிடம் தோல்வியடைந்தார்.

அதன்பிறகு காயம் காரணமாக விம்பிள்டன், யு.எஸ். ஓபன் போட்டிகளில் அவரால் விளையாட முடியாமல் போனது. 2022-ல் விம்பிள்டன் தொட ரில் முதல் சுற்றிலேயே வெளியேற்றப்பட்ட செரீனா, vogue இதழுக்கு அளித்த பேட்டியில் யு.எஸ்.ஓபன் தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

வெற்றி முழக்கத்துடன் அவரை அனுப்பிவைக்க வேண்டும் என ரசிகர்கள் காத்திருந்த நிலையில் 3-வது சுற்றில் ஆஸ்திரேலிய வீராங்கனை அஜ்லாவிடம் போராடி தோல்வியை தழுவினார்.

**கண்கலங்க வைத்த செரீனாவின் பேச்சு!**

மைதானத்தில் இருந்து விடைபெறும் முன்பு செரீனா கொடுத்த பேட்டி பார்வையாளர்களின் உணர்ச்சிகளை தூண்டியது. ஒரு ஆணாக இருந்திருந்தால் தான் டென்னிஸில் இருந்து விலகியிருக்க மாட்டேன் என சொன்ன செரீனா குழந்தையை வளர்ப்பதில் கவனம் செலுத்தப் போவதாக கண்ணீர் மல்க விடைபெற்றார்.

**செரீனாவும், அவரை சுற்றிய சர்ச்சைகளும்!**

செரீனாவின் இந்த 27 ஆண்டுகால டென்னிஸ் வாழ்க்கையில் சில சர்ச்சைகளும் கசப்பான அனுபவங்களும் கூட உண்டு.

ஆம், கருப்பினத்தைச் சேர்ந்த செரீனா, டென்னிஸ் விளையாட தொடங்கிய காலத்திலேயே இன வெறியை எதிர்க்கொண்டார். 2001-ம் ஆண்டு நடந்த இந்தியன் வேல்ஸ் போட்டியில் பார்வையாளர்கள் அவரது குடும்பத்தினரை இன ரீதியாக அவமானப்படுத்தியதால் 15 ஆண்டுகளாக இந்தியன் வேல்ஸ் போட்டிகளை புறக்கணித்து வந்தார்.

2002-ம் ஆண்டில் பாரம்பரியமாக அணியப்பட்டு வந்த டென்னிஸ் உடைக்கு பை பை சொல்லி கேட் சூட் எனும் ஆடையை அவர் அணிந்து வந்தது ஃபேஷன் உலகில் பேசுபொருளானது.



2009-ம் ஆண்டு நடந்த யு.எஸ். ஓபன் அரையிறுதி போட்டியில் தோல்வியடைந்த செரீனா, போட்டி நடுவரை நோக்கி கத்தியதோடு தனது டென்னிஸ் மட்டையை தரையில் அடித்து நொறுக்கினார். இதனால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

2018-ல் நடந்த யு.எஸ். ஓபன் போட்டியில் நவோமி ஓசாகாவுக்கு எதிராக விளையாடிய போது செரீனாவின் பயிற்சியாளர் மைதானத்திற்கு வெளியில் இருந்து அவருக்கு சைகைகளை காட்டியதாக புகார் எழுந்தது.

இதை செரீனா மறுத்த நிலையில் அவரது பயிற்சியாளர் ஒப்புக்கொண்டார். இதன் விளைவாக அவருக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

இப்படி பல சர்ச்சைகளையும் கடந்து தான் செரீனா வில்லியம்ஸ் டென்னிஸ் உலகின் முடிசூடா பேரரசியாக உயர்ந்தார். இப்போது ஓய்வு பெற்றிருந்தாலும், டென்னிஸ் களத்தில் அவர் விட்டுச்சென்றுள்ள சாதனை தடங்கள் பல தலைமுறைகள் பாடம் படிக்க உதவும்.

# நாட்டை சூறையாடும் ‘லைசன்ஸ்’ அல்ல ‘மக்கள் ஆணை’

**வி. தேவராஜ்**




அரசியல்வாதிகள் அரசியலை முழுமையாக தமக்கான வர்த்தக மையமாக மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். இந்த வர்த்தகத்தில் மக்களுக்கும் பங்கு உள்ளது. தமது வாக்குச் சீட்டைக் கைகளில் வைத்துக் கொண்டு தேர்தல் காலங்களில் சில்லறைகளுக்காகவும் தமது வாழ்வாதாரத்துக்கான எதிர்பார்ப்புக்களுக்காகவும் விலை போய்விடுகின்றனர். இன்னும் பலர் ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்ற மனப்போக்கில் தேர்தல் காலங்களில் இருந்துவிடுகின்றனர். மொத்தத்தில் தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் எல்லாவற்றையும் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்கின்றனர்.

இந்த அரசியல் போக்குக்குள்ளும் மக்கள் அதிரடி மாற்றங்களையும் செய்து விடுகின்றனர். மக்கள் எதைச் செய்து என்ன பயன் இறுதியில் அதிகாரம் சங்கீத நாற்காலிபோல் ஒரு பகுதியினரின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றது. அதிகாரத்துக்காகப் பிரிந்து நின்று கயிறு இழுக்கும் அரசியல் சக்திகளில் ஒரு பகுதியினர் வெற்றி பெற்று ஆட்சி பீடம் ஏற மறு பகுதியினர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்கின்றனர். இதுதான் இலங்கை அரசியலின் போக்காக இருக்கின்றது.

மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்படும் வரை மக்கள் தொண்டனாக மக்கள் சேவகனாக காட்டிக் கொள்ளும் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின் கறுப்புக் கண்ணாடிகள் அவர்களது கண்களை மறைத்துவிடுகின்றன. கறுப்புக் கண்ணாடிகளுடனான கார்கள் ஆளையே மறைத்துவிடும். இதற்குப் பின் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் எஜமானர்கள். வாக்களித்த மக்கள் சாதாரண சேவகர்கள். எஜமானை நோக்கி சாதாரண சேவகர்கள் கேள்வி எழுப்ப இயலாது என்பதே இன்றைய அரசியல்வாதிகள் வகுத்துள்ள எழுதப்படாத சட்டம்.

கடந்த ஓரிரு வருடங்களுக்கு முன் கர்தினால் ரஞ்சித் மல்கம் ஆண்டகை இன்றைய அரசியல்வாதிகள்பற்றிக் குறிப்பிட்ட கூற்று இது.

கர்தினால் ரஞ்சித் மல்கம் ஆண்டகையைச் சந்திக்க வந்த ஒரு அரசியல்வாதி நான் அரசியலுக்கு வந்து தேவைக்கு அதிகமாகவே உழைத்துவிட்டேன். இது போதும் இனி நான் அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போகின்றேன்' என்று கூறியதாகக் குறிப்பிட்டார். பெரும்பாலான அரசியல்வாதிகள் எவ்வாறு மக்களையும் நாட்டையும் உறுஞ்சிக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு இது தக்க சான்று.

அரசியல் அதிகார மட்டத்தில் மேல் இருந்து கீழ் நோக்கி படிமுறையாக அமைந்துள்ள இந்த ஊழல் மோசடிகள், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல் என்பன அளவில் வேறுபடுகின்றன. ஆனால், இந்த படிமுறைத் தட்டில் உள்ளவர்களது கொள்ளை, ஊழல் மோசடிகள் மேல் இருந்து கீழ் நோக்கிய சங்கிலித் தொடராக இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஊழல் மோசடிக்குள் அரச அதிகாரிகளுக்குள்ளும் வியாபித்து அவர்களையும் உள்வாங்கியதாக உள்ளது. மொத்தத்தில் அரசியல்வாதிகள் அரசியலையும் அரசியல் கட்டமைப்பையும் அரச இயந்திரத்தையும் தமது ஊழல் மோசடிகளுக்கேற்ற வகையில் வடிவமைத்துக் கொண்டுள்ளனர்.

அண்மைக் காலமாக அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ‘கோடிகளில்’ புரண்டதை நாடே அறியும். அந்தளவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலை போகின்றனர். குறிப்பாக தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குச் சளைத்தவர்கள் அல்ல. அவர்கள் இதனை வழக்கமான அரசியல் நடைமுறையாக எந்த வித கூச்சமும் இன்றி பின்பற்றுகின்றனர். அவர்கள் சார்ந்த கட்சிகளும் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகின்றன. அல்லது விசாரணை செய்கின்றோம் என அறிக்கைவிடுவதுடன் கிடப்பில் போட்டுவிடுகின்றனர்.

இதற்கெதிரான மக்கள் எழுச்சியே காலிமுகத்திடலில் நூறு நாட்களைக் கடந்து வெற்றியை நோக்கிப் பயணித்தது. இதற்கு ஆதரவாக சமாந்தரமாக தென்னிலங்கை முழுவதும் மக்கள் போராட்டம் வியாபித்தது. இந்த மக்கள் எழுச்சி என்பது இலங்கையின் அரசியல்வாதிகள் தமக்காக மக்களின் ஆணை மீது கட்டி எழுப்பிக்கொண்ட பிரகடனப்படுத்தப்படாத கட்டமைப்புக்கு எதிரானதாகும்.

இலங்கை அரசியலில் 74 வருடங்களாக அரசியல்வாதிகளினால் கட்டிக் காத்த எழுதப்படாத அரசியல் மரபுக்கு எதிராகவே சிங்கள இளைஞர்கள் ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இந்தக் கிளர்ச்சிகளை இலங்கையின் ஆளும் வர்க்கம் வெற்றிகரமாக முறியடித்து தமது இருப்பையும் அரசியல் நலன்களையும் தக்க வைத்துக் கொண்டன. இதற்கும் அப்பால் காலத்துக்குக் காலம் தென்னிலங்கை மக்கள் தேர்தல் மூலம் முகங்களையும் நிறங்களையும் மாற்றி மாற்றி அமைத்துப் பார்த்தனர். அப்பொழுதும் அரசியல்வாதிகளே வென்றனர்.

அதாவது, தென்னிலங்கை அரசியல் சக்திகள் பிரிந்து நின்று தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்திற்காகப் போராடி வென்றவர்கள் ஆட்சிபீடத்திலும் தோற்றவர்கள் எதிர்க் கட்சி வரிசையிலும் அமர்ந்தனர்.

மொத்தத்தில் கூறப்போனால் மக்களே, ஊழல் பேர்வழிகள் மோசடிக்காரர்கள் கொள்ளையர்களை மாறி மாறி ஆட்சி பீடத்தில் அமர்த்தி தொடர் தோல்விகளைச் சந்தித்தனர். போதாக்குறைக்கு கடந்த இரண்டரை வருடங்களாக நாட்டின் கஜானாவே காலியாகும் நிலைக்குப் போய் நாடு வங்குரோத்து நிலைக்குள் தள்ளப்பட்டதுடன் நாட்டு மக்கள் உயிர்வாழ்வதே கேள்விக்குறியாகியது.

இந்த ஒரு நிலையில்தான் அரசியல் கட்டமைப்பில் மாற்றம் குறித்த சிந்தனை தென்னிலங்கை இளைஞர் யுவதிகளிடையேக் கருக்கொண்டது. இந்தச் சிந்தனைக் கரு தென்னிலங்கையின் பெரும்பாலான மக்களின் சிந்தனையிலும் ஆழப்பதியவே அது அகிம்சை வழிப் போராட்டமாக பீறிட்டுக் கிளம்பியது. நூறு நாட்களைக் கடந்த அந்தக் கரு குழந்தையாகப் பிரசவிப்பதற்கு முன்பே கரு கலைப்பு செய்யப்பட்டுவிட்டது.

இதுபற்றி நண்பர் ஒருவர் கூறுகையில், இது ஒரு முன்னுதாரணமாக இருந்துவிடக் கூடாது என்பதில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் மிகக் கவனமாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.



அதேவேளையில் தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மற்றும் மக்கள் எதிர்பார்க்கும் “சிஸ்ரம் சேஞ்ச்” என்பது ஒட்டு மொத்த அரசியல்வாதிகளின் இருப்புக்கு ஆபத்தாக முடியும் என தென்னிலங்கை அரசியல் சக்திகள் கணக்கிட்டுள்ளன என்பதே உண்மையாகும்.

எனவேதான் தென்னிலங்கை எதிர்பார்த்து நின்ற “சிஸ்ரம் சேஞ்ச்”க்கு பயங்கரவாதம் என்றும் ஜனநாயகத்தை சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் சதித்திட்டம் என்றும் தேசத்துரோகச் செயல் என்றும் ஆட்சியாளர்கள் முத்திரைகுத்தி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வேட்டையாடுகின்றனர்.

ஆனால் தென்னிலங்கை மக்கள் எதிர்பார்த்த அரசியல் முறையில் மாற்றம் கொண்டு வருவதுபற்றி பேசவில்லை. ஊழல் அற்ற அரசியல் குறித்து பேசப்படவில்லை. கொள்ளையடித்த பணத்தை நாட்டுக்குக் கொண்டு வருவது பற்றி பேசப்படவில்லை. ஊழல்வாதிகளையும் கொள்ளையர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவதுபற்றி பேசவில்லை.

ஆனால், ஜனாதிபதியின் வீட்டில் மதுப் போத்தலை திருடியவர் என்று கூறப்படும் நபர்களில் இருந்து பலர் தொடராக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுகின்றனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் மக்கள் ஆணை பெற்றவர்களிடம் வாக்களித்த மக்களாக இருந்தாலும் கேள்வி கேட்க இயலாது என்பதுதான் ஆட்சியாளர்களின் வாதமாக சித்தாந்தமாக உள்ளது. அதனை மீறி கேள்வி கேட்ட பின் அது பயங்கரவாதமாகும். தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்கு ஒப்பானதாகும். ஆட்சியைக் கவிழ்க்கும் சதிக்கு ஒப்பானதாகும்.

மக்கள் ஆணை பெற்றவர்களிடம் ‘மாற்றத்தை’ மக்கள் எதிர்பார்க்க முடியாது எனில் நாட்டில் நடைபெறுவது எந்த ஆட்சி?


மக்கள் ஆணை வழங்கியது நாட்டைக் கொள்ளையடிப்பதற்கோ அல்லது நாட்டை சூறையாடுவதற்கோ வழங்கப்பட்ட ‘லைசன்’ அல்ல என்பதை மக்கள் நிரூபிப்பர்.




**மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் மக்கள் ஆணை பெற்றவர்களிடம் வாக்களித்த மக்களாக இருந்தாலும் கேள்வி கேட்க இயலாது என்பதுதான் ஆட்சியாளர்களின் வாதமாக சித்தாந்தமாக உள்ளது. அதனை மீறி கேள்வி கேட்ட பின் அது பயங்கரவாதமாகும். தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்கு ஒப்பானதாகும். ஆட்சியைக் கவிழ்க்கும் சதிக்கு ஒப்பானதாகும்.**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................
ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.............................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........  ii) 18, 15, 12, ............., ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8  **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130  2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745  **23.** 455
**24.** 11100ml / 1100ml  **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30  **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1  **31.** 2  **32.** 3
**33.** 2  **34.** 3  **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 07.09.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 07.09.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பொதுமக்கள் தினத்தில் அதிகாரிகள் கூட்டம் நடத்துவது தவிர்க்கவேண்டும்

## கிழக்கு ஆளுநரிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை



திருமலை, செப். 07

கிழக்கு மாகாண சபையில் பொதுமக்கள் தினமான திங்கட்கிழமைகளில் அதிகாரிகள் கூட்டம் கூடுவதைத் தவிர்க்கவேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிழக்கு மாகாண சபை அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களை உள்ளடக்கிய அதிகாரிகள் கூட்டம் பிரதம செயலாளரினால் அவரது அலுவலகத்தில் கூட்டப்பட்டது. இக்கூட்டம் பகல் வரை நீடித்துள்ளது. கிழக்கு மாகாண ஆளுநரின் சம்மதத்துடனேயே இக்கூட்டம் கூட்டப்பட்டதாக தெரிய வருகின்றது.

இதனால் தமது தேவைகளுக்காக மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து வந்த பொதுமக்கள் உரிய அதிகாரிகளைச் சந்திப்பதற்காக மாலை வரை காத்திருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதாகவும், மீண்டும் தமது பகுதிகளுக்குத் திரும்பிச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் எனது கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

திங்கட்கிழமை பொதுமக்கள் தினம் என அரசாங்கத்தினால் பிரகடனப்பட்டிருப்பதால் அந்த தினத்திலேயே பொதுமக்கள் அலுவலகங்களுக்கு வருகின்றனர். இந்தத் தினத்தில் பொதுமக்களைச் சந்திப்பதற்குரிய அதிகாரிகளை வேறு கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வது அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணானது.

எனவே, எதிர்காலத்தில் திங்கட்கிழமைகளில் அதிகாரிகள் தமது அலுவலகத்தில் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்-என்றார். (அ)

# திருமலை பெண் இலக்கிய ஆளுமைகளின் ஒன்றுகூடல்



திருமலை, செப். 07

திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை ஒருங்கிணைத்து கலைத் துறை சார்வாண்மையை மேலும் முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் “ஒரு பொழுதில் ஒன்று கூடுவோம்” எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஆளுமைகளின் ஒன்றுகூடல் கடந்த 3ஆம் திகதி மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ஷனின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்று கூடல் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்த ஒன்றுகூடலின் வளவாளர்களாக, தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி, திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி சுபத்திரா ஜோன் தேவதாஸ், திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி நிரோஷா, முன்பள்ளி அதிபர் அருஷா ஜெயராஜா, சட்டத்தரணி திருமதி ஐஸ்வர்யா சிவகுமார், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் (திருமதி) என்.ஸ்ரீதேவி, கிழக்கு பல்கலைக்கழக நூலகர் திருமதி பானு சுதாகரன், சுதந்திர ஊடகவியலாளர் கல்யாணி நவரெத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, தற்கால இடர் மிகுந்த சூழலை எதிர்கொள்வதில் பெண்களின் பங்களிப்பு, பெண்களும் சட்டமும், பெண் ஆளுமையும் இன்றைய நிலையும், நிர்வாகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், பெண்களும் நிர்வாக ஆற்றலும், பேகர் சமூக பண்பாடும் தற்காலத்தின் சவால்களும், பெண் தலைமைத்துவ குடும்பமும் தற்காலத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும், பெண்களும் அரசியலும், அரங்கும் பெண்களும், தற்கால கல்வி முறைமையில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்புக்களில் பல்வேறுபட்ட முக்கிய விடயங்கள் பேசப்பட்டதுடன் பாடல், வயலின் இசை, கவிதை, நாடகம், கூத்து போன்ற நிகழ்வுகளும் பெண்களினால் நிகழ்த்தப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்ட திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் மற்றும் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 100 சிறுகதை அடங்கிய நூல்களையும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சனினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்க தென்கிழக்குப் பல்கலை தயார்!



அம்பாறை, செப். 07

விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கும் விவசாயிகளுக்கான தேவையான தொழில்நுட்ப மற்றும் நடைமுறை ரீதியான அறிவை வழங்குவதற்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடம் தயாராகவுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கருக்கும் அம்பாறை மாவட்ட விவசாய திணைக்கள உயரதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடல் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடாதிபதி யூ.எல்.எம்.மஜீத் தலைமையில் தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விவசாய உற்பத்தியை அதிகரிப்பதிலும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

விவசாய விரிவாக்கம், அவர்களின் சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக இருந்தால், புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கு விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் விவசாயத்தை வளர்ச்சியில் பாதையில் கொண்டு செல்ல முடியும் என துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் இதன்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயத் துறையில் கவனம் இல்லாமை, நிர்வாகக் கொள்கைகள், பொருளாதாரக் காரணிகள், கட்டமைப்பு பலவீனங்கள்,நிர்வாக பலவீனங்கள், தொழில்நுட்ப மற்றும் தனிப்பட்ட நிபுணர்களின் அறிவு இல்லாமை, விவசாயம் பலவீனம் என்று முடிவுகள் காட்டுகின்றன.

படித்த விவசாயி இல்லையென்றால், வயலில் சரியான நேரத்தில் பயன்படுத்த வேண்டிய இரசாயன உரங்கள் மற்றும் இரசாயன உரங்கள் இல்லாததால் தாவரங்களில் நோய்களை உண்டாக்கு வது குறித்த போதிய அறிவு விவசாயிக்கு இருக்காது.

கல்வியின் மூலம், விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் எதிர்கொள்ளும் பூச்சி மற்றும் நோய்கள் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவும் திறன்களைக் கற்றுக்கொள்ளலாம். கல்வி தகவல் தொடர்புகளை மேம்படுத்துகிறது. கல்வியின் மூலம், விவசாயிகள் ஒருவரையொருவர் தொடர்பு கொள்ளவும், அவர்கள் செய்வதை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த யோசனைகளையும் அறிவையும் பகிர்ந்து கொள்ளலாம்.

விவசாய ஆராய்ச்சி மற்ற முதலீடுகள் இல்லாமல் கூட வேலை செய்கிறது. ஆனால் மற்ற முதலீடுகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக ஆக்குகிறது. விவசாய ஆராய்ச்சி வறுமைக் குறைப்புக்கான குறைந்த செலவில் அணுகுமுறையை வழங்குகிறது, ஏனெனில் இது விவசாயிகளின் சொந்த உழைப்பு இதனால் கூடுதல் தனியார் முதலீட்டை ஈர்க்கிறது. விவசாயிகளுக்கு வழங்கும் தொழில்நுட்ப சேவைகள் தொடர்பாக விரிவாக்க முகவர்களால் அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்னைகள் வளங்களின் பற்றாக்குறை, மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில் நுட்பங்கள் பற்றிய மோசமான அறிவு, விவசாயிகளிடையே கல்வியறிவின்மை மற்றும் தகவல் தொடர்பு சிக்கல்கள் காணப்படுகின்றன.

விவசாயத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. இது சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கிறது. விவசாயத்தின் வளர்ச்சியானது, வர்த்தகம் அல்லாத பல நடவடிக்கைகளில் கிராமப்புற தொழிலாளர்களின் வேலைவாய்ப்பின் அடிப்படையில் கிடைத்தட்ட உடனடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தொழில்நுட்ப மாற்றம் என்பது உலகமயமாக்கலைத் தூண்டும் மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். விவசாயிகளுக்கும் சமூகத்திற்கும் இடையிலான மாறிவரும் உறவுகள் பெரும்பாலும் மாற்றங்களின் விளைவாகும். விவசாயிகள் பயன்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் புதிய தொழில்நுட் பம் சர்வதேச வர்த்தக மோதல்களின் முன்னணியில் உள்ளது-என்றார். (அ)

# கிழக்குப் பல்கலை சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்துக்கு புதிய பீடாதிபதி

மட்டக்களப்பு, செப். 07

கிழக்குப்பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் நான்காவது புதிய பீடாதிபதி தெரிவிற்கான தேர்தல் நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் கிழக்குப்பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில், புதிதாக திறந்துவைக்கப்பட்ட சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் சபை மண்டபத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றது.

தேர்தலில் களமிறங்கிய மூன்று வேட்பாளர்களில் கலாநிதி தில்லை நாதன் சதானந்தன் தன்னுடன் போட்டியில் கலந்து கொண்ட ஏனைய இரண்டு வேட்பாளர்களை விட அதிக வாக்குகளை பெற்று பீடாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று கிழக்குப்பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் நான்காவது பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

வாக்குப்பதிவில் பதிவான 31 வாக்குகளில் கலாநிதி தில்லைநாதன் சதானந்தன் அவர்களுக்கு 15 வாக்குகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 20 ஆண்டுகள் காணாத அளவு யூரோவின் பெறுமதியில் சரிவு!

பரிஸ், செப். 07

நோர்ட் ஸ்ட்ரீம் 1 எரிவாயு குழாய் காலவரையின்றி மூடப்படும் என்று ரஷ்யா கடந்த வார இறுதி யில் அறிவித்த பிறகு, திங்களன்று ஐரோப்பிய நாணயமான யூரோவின் மதிப்பு 20 ஆண்டுகளில் காணாத அளவில் சரிந்துள்ளது.



யூரோ 20 ஆண்டுகளில் முதல் முறையாக 99 சென்ட்டுகளுக்கு கீழே சரிந்துள்ளது.

யூரோவின் பெறுமதி 0.7 சதவீதம் குறைந்து 98.80 அமெரிக்க சென்ட்களாக இருந்தது.

ஐரோப்பிய நாடுகளுக்கான எரிவாயு விநியோகத்தை ரஷ்யா நிறுத்தியுள்ளது.

"ரஷ்யா காலவரையறையின்றி ஐரோப்பாவிற்கான எரிவாயு விநியோகத்தை நிறுத்தியது, மீள ஆரம்பிக்கவில்லை என்பதன் முழுப் பாதிப்பைக் கருத்தில் கொண்டு, யூரோ இன்னும் எதிர்மறையாக உள்ளது. எரிவாயு இல்லை" என்று ஒரு வங்கி நிபுணர் நிலைமை குறித்து குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் எரிசக்தித் தட்டுப்பாடு, அதிகரிக்கும் விலைகள், வளர்ச்சிக்குப் பாதிப்பு ஆகியவை ஏற்படக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது. வார இறுதியில், ஐரோப்பிய நாடுகள் சரிவைக் கட்டுப்படுத்தவும், வளர்ந்து வரும் பணவீக்கம் மற் றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடியைச் சமாளிக்கவும் தொடர் நடவடிக்கைகளை அறிவித்துள்ளன.

ஜேர்மனியின் ஆளும் கூட்டணி 65 பில்லியன் டொலர் பணவீக்க நிவாரணப் பொதிக்கு ஒப்புக் கொண்டது. ஜேர்மன் அரசாங்கத்தால் வழங்கப்படும் மூன்றாவது நிவாரணப் பொதி இதுவாகும். மொத்தம் 95 பில்லியன் டொலர்கள் பெறுமதியான நிவாரணப்பொதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குறிப்பிட்ட நிவாரணப் பொதியில் ஆற்றல் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் மற்றும் குடிமக்களுக்கான மலிவான பொதுப் போக்குவரத்து ஆகியவை அடங்கும்.

எரிவாயு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பிறகு, 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பல நாடுகள், எதிர்காலத்தில் ரஷ்யா விநியோகங்களை மீண்டும் தொடங்காது என்று அஞ்சுகின்றன. மேலும் இது யூரோவை மேலும் பின்னுக்குத் தள்ளக்கூடும். (அ)

# சீனாவில் சிச்சுவானை உலுக்கிய நிலநடுக்கம்

## பலியானோரின் எண்ணிக்கை 46



பீஜிங். செப். 07

சீனாவின் தென்மேற்கு மாகாணமான சிச்சுவானில் நேற்று திங்கட்கிழமை ஏற்பட்ட 6.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டு குறைந்தது 46 பேர் உயிரிழந் தனர்.16 பேர் காணாமல் போயுள்ளனர்.

லுடிங் கவுண்டியில் உள்ள மலைப் பகுதியில் நேற்று நண்பகலுக்குப் பிறகு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் தெரிவித்துள்ளது.

டெக்டோனிக் தட்டுகள் சந்திக்கும் திபெத்திய பீடபூமியின் விளிம்பில் அமர்ந்திருக்கும் சிச்சுவான், தொடர்ந்து நிலநடுக்கங்களால் பாதிக்கப் படுகிறது. கடந்த ஜூன் மாதம் ஏற்பட்ட இரண்டு நிலநடுக் கங்களில் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன் தினம் நில நடுக்க பாதிப்புகளில் சிக்கி காணாமல் போயுள்ளவர்களை தேடும் பணி இரவு-பகலாகத் தொடர்ந்த நிலையில் பலர் சடலங்கான மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று காலை வரை பலி எண்ணிக்கை 46 ஆக உயர்ந்தத்துள்ளதாகவும் 16 பேரைக் காணவில்லை என சீன அரச அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். முன்னதாக, லுடிங் கவுண்டியில் 7 பேர் இறந்ததா கவும், தெற்கே அண்டை நகரான ஷிமி யன் கவுண்டியில் 14 பேர் இறந்த தாகவும் அதிகாரிகள் தெரிவித் தனர்.

மலைப்பகுதிகளில் இருந்து கற்கள் மற்றும் மண் விழுந்து வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டது டன், மின் தடைகளை ஏற்படுத் தியதாக அதிகாரிகள் கூறினர். (அ)

# பொருளாதாரத் தடை நீங்கும்வரை எரிவாயு விநியோகம் தொடங்காது

## ரஷ்ய அரசு அதிரடி அறிவிப்பு

மொஸ்கோ, செப். 07

**ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை மேற்கு நாடுகள் நீக்கும் வரை ஐரோப்பா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்கான எரிவாறு விநியோகம் முழுவதுமாக மீண்டும் தொடங்காது என ரஷ்ய அரசு தெரிவித்துள்ளது.**

நேற்று முன் தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ் கோவ், ஐரோப்பிய நாடுகளுக்கான நோர்ட் ஸ்ட்ரீம் 1 குழாய் வழி எரிவாயு விநியோகம் சீராக இடம்பெறாமைக்கு ஜேர்மனி மற்றும் இங்கிலாந்து உள் ளிட்ட மேற்கத்திய நாடுகளால் எங்கள் நாட்டிற்கு எதிராக அமுல்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடைகளே காரணம் என்று குற்றம் சாட்டினார்.




ஐரோப்பா இதுவரை இல்லாதவாறு மோச மான எரிவாயு நெருக்கடியைத் எதிர்கொள்வ தற்கு அந்நாடுகளின் செயற்பாடுகளே காரணம். ரஷ்யா மீதான தடைகளுக்கு எதிராக பதிலடி கொடுக்கப்படும் எனவும் டிமிட்ரி பெஸ்கோவ் எச்சரித்தார்.

பெப்ரவரி 24 தொடங்கப்பட்ட உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை தொடர்ந்து நவீன வரலாற்றில் மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை ரஷ்யா மீது அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் விதித்தன. இது ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரப் போர் என வர்ணித் துள்ள ரஷ்ய ஜனாதிபதி புடின், இதன் விளைவாக ஐரோப்பா உள்ளிட்ட மேற்கு நாடுகள் எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

1960கள் மற்றும் 1970களில் சோவியத் ஒன்றியம் ஐரோப்பாவிற்கு குழாய்களை அமைத்ததில் இருந்து மேற்கு நோக்கி எண்ணெய் மற்றும் எரிவாயு விற்பனை ரஷ்யாவின் மிகவும் இலாபகர மான வர்த்தகங்களில் ஒன்றாக உள்ளது. எனினும் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மேற்கு நாடுகளின் தடைகளை அடுத்து ரஷ்யா எண்ணெய், எரிவாயு விநியோகத்தில் மாற்று வழிகளை நாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புர்கினா பாசோவில் மக்கள் மீது தீவிரவாதிகள் குண்டு தாக்குதல்!

## 35 பேர் உயிரிழப்பு

ஒகாடோகோ, செப். 07

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவின் சஹேல் பிராந்தியத்தில் பொதுமக்கள் சென்ற வாகனம் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய குண்டுத் தாக்குதலில் குறைந்தது 35 பேர் கொல்லப்பட்டனர். 37 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாக ஹேல் பிராந்தியத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

புர்கினா பாசோவில் கடந்த 7 வருடங்களுக்கு மேலாக கிளர்ச்சிக் குழுக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த மோதலில் இதுவரை 2,000 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 19 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் போர்சாங்காவிற்கும் டிஜிபோவுக்கும் இடையிலான பகுதியில் பொதுமக்கள் சென்று கொண்டிருந்த வாகனம் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியாக சஹேல் பிராந்திய ஆளுநர் ரோடோல்ப் சோர்கோ தெரிவித்துள்ளார்.

தாக்குதலை அடுத்து பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியை சுற்றி வளைத்து காப்பரன் அமைத்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நடவடிக்கை எடுத்தனர் என ஆளுநர் ரோடோல்ப் சோர்கோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜிஹாதி குழுக்கள் சமீபத்தில் வடக்கில் உள்ள முக்கிய நகரங்களான டோரி மற்றும் டிஜிபோவுக்கு செல்லும் தமனி வீதிகளில் இதேபோன்ற தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஒகஸ்ட் தொடக்கத்தில் இதே பகுதியில் நடத்தப்பட்ட இரட்டை குண்டு தாக்குதலில் 15 படையினர் கொல்லப்பட்டனர். அல்-கொய்தா அல்லது இஸ்லாமிய அரசு குழுவுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் ஜிஹாதிகளின் தலைமையில் புர்கினா பாசோ வடக்கு மற்றும் கிழக்கில் அதிக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# வட கொரியாவிடம் இருந்து ஆயுதங்கள் வாங்கும் ரஷ்யா

மொஸ்கோ, செப். 07

வட கொரியாவிடம் இருந்து பீரங்கி உள்ளிட்ட பல ஆயுதங்களை ரஷ்யா வாங்குகிறது என அமெரிக்க உளவுத் துறை தெரிவித்துள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரில் ரஷ்யாவின் திறன் குறைந்து வருவதாகவும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் நியூயோர்க் டைம்ஸிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பீரங்கி குண்டுகள் மற்றும் ரொக்கெட்டுகளை உள்ளடக்கிய ஆயுதங்களை வடகொரியாவிடம் இருந்து ரஷ்யா வாங்கியுள்ளதாகவும் இதுபோன்ற மேலும் பல இராணுவத் தளபாடங்களை வாங்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத்துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானில் தயாரிக்கப்பட்ட ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள் அவற்றின் செயல்திறனை நிரூபிப்பதில் தோல்வி அடைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் நூற்றுக்கணக்கான மொஹஜர்-6 மற்றும் ஷாஹெட்-சீரிஸ் ஆளில்லா விமானங்களை வாங்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக அந்த அதிகாரி கூறினார்.

இதற்கிடையே ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளை மீட்கும் தாக்குதல்களை உக்ரைன் சமீபத்தில் பல இடங்களில் தீவிரப்படுத்தியுள்ளது.

உக்ரைனின் தெற்கில் இரண்டு குடியேற்றங்களையும், கிழக்கு உக்ரைனில் மூன்றில் ஒரு பகுதியையும், கிழக்கில் கூடுதலாக ஒரு நிலப்பரப்பையும் தமது படைகள் கைப்பற்றியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ ஆயுத-தளபாடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன், மேற்கத்திய நாடுகளின் ரஷ்யா மீதான தடைகளும் அந்நாட்டுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். (அ)

# ரி - 20 கிரிக்கெட்டின் சிறந்த ஐந்து வீரர்கள்!

## றிக்கி பொண்டிங்கின் கணிப்பு

சிட்னி, செப். 07

உலகின் சிறந்த ஐந்து இருபது - 20 வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார் முன்னாள் வீரர் றிக்கி பொண்டிங்.

பாபர் அஸாம், ஜோஸ் பட்லர், பாண்ட்யா, ரஷித் கான், பும்ரா என இந்த ஐந்து பேரையும் உலகின் சிறந்த இருபது - 20 வீரர்களாகக் குறிப்பிட்டுள்ளார் பொண்டிங்.

இவர்களைப் பற்றிய பொண்டிங்கின் கருத்துகள்.

பாபர் அஸாம்: இருபது - 20 கிரிக்கெட்டின் முதல்வரிசை துடுப்பாட்ட வீரர் அவருடைய சாதனைகளே அவரின் திறமையைச் சொல்லும்.

ரஷித் கான் - இவரே நம்பர் - வன் இருபது - 20 வீரர். ஐ. பி. எல். ஏலத்தில் ஏலத்தொகைக்குக் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் இருந்தால், ரஷித் கான்தான் அதிக தொகைக்குத் தெரிவாக வாய்ப்புண்டு. இருபது -20 கிரிக்கெட்டில்



அவருடைய சராசரி அற்புதம். அவர் இடம்பெற்றுள்ள அணிக்கு எதிராக நீங்கள் விளையாடினால் உங்களால் அதற்கு முந்தைய இரவில் நிம்மதியாகத் தூங்க முடியாது.

பட்லர் - பட்லருக்குப் பயிற்சியளிக்கும்போதுதான் மற்ற வீரர்களிடம் இல்லாத திறமை இவரிடம் உள்ளது என்பதை அறிவீர்கள். குறுகிய காலத்தில் ஆட்டத்தின் போக்கை மாற்றி விடுவார். கடந்த ஒரு வருடத்தில் அவருடைய ஆட்டத்திறன் அடுத்தக்கட்டத்துக்குச் சென்றுள்ளது.

பாண்ட்யா - ஐ. பி. எல். போட்டியில் சிறப்பாக விளையாடினார். அவருடைய பந்துவீச்சில் எனக்குச் சந்தேகம் இருந்தது. ஆனால், பழையபடி பந்துவீசிக் கொண்டிருக்கிறார். துடுப்பாட்டத்தில் பக்குவம் அடைந்துள்ளார். ஆட்டத்தின் சூழலை நன்கு புரிந்துகொள்கிறார். இருபது - 20 கிரிக்கெட்டின் சிறந்த சகலதுறை வீரராக உள்ளார்.

பும்ரா - டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 கிரிக்கெட்டின் முழுமையான பந்துவீச்சாளர். புதிய பந்தில் நன்கு பந்துவீசுவார். கடைசி ஓவர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துவார்.



## சுரேஷ் ரெய்னா ஓய்வு!

புதுடில்லி, செப். 07

கிரிக்கெட்டில் அனைத்து விதமான போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுகிறார் என்று இந்திய வீரர் சுரேஷ் ரெய்னா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

நாட்டுக்காகவும், எனது மாநிலமான உத்தர பிரதேசத்துக்காகவும் விளையாடியது பெருமை அளிக்கிறது. கிரிக்கெட்டின் அனைத்து விதமான போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுகிறேன். என் மீது நம்பிக்கை வைத்து ஆதரவு அளித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, உத்தரப் பிரதேச கிரிக்கெட் சங்கம், சென்னை அணி, ராஜிவ் சுக்லா மற்றும் இரசிகர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன் - என்று கூறியுள்ளார்.

கடந்த 2020 ஒகஸ்ட் 15ஆம் நாள் சர்வதேச போட்டிகளில் இருந்து இந்திய அணி முன்னாள் தலைவர் டோனி ஓய்வு பெற்ற சில மணி நேரங்களில் ரெய்னாவும் ஓய்வை அறிவித்தார். பிறகு ஐ. பி. எல்., போட்டி களில் மட்டும் சென்னை அணிக்காக விளையாடி வந்தார்.

கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்த ஐ. பி. எல்., தொடரின் போது பாதியிலேயே தாயகம் திரும்பினார். தொடர்ந்து இந்த ஆண்டு நடந்த ஏலத்தின்போது சென்னை அணியில் இருந்து ரெய்னா விடுவிக்கப்பட்டார்.

இச்சூழ்நிலையில், அனைத்து விதமான போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ள ரெய்னா, வெளிநாடுகளில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க திட்டமிட்டுள்ளார். இந்தியாவுக்காக அல்லது உள்நாட்டு அணிக்காக பங்கேற்றால், வெளிநாட்டு அணிகளில் பங்கேற்க முடியாது என்பதால் அவர் ஓய்வை அறிவித்துள்ளார் என்று தெரிகிறது. அடுத்தாண்டு தொடங்கும் தென்னாபிரிக்கா இருபது - 20 தொடரில் அவர் பங்கேற்கக்கூடும் என தெரிகிறது.

இந்திய அணி சார்பில் ரெய்னா 18 டெஸ்ட் போட்டிகள், 226 ஒரு நாள் போட்டிகள், 78 இருபது -20 போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

2011இல் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் ரெய்னா இடம்பெற்றிருந்தார். ரெய்னா கடைசியாக, 2021இல் அபுதாபியில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நடாலை வீழ்த்தினார் ரைபோ!

நியூயோர்க், செப். 07

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்றில் பிரபல வீரர் நடாலை வீழ்த்தினார் 24 வயதான அமெரிக்க வீரர் பிரான்சஸ் ரைபோ. இதன் மூலம் அவர் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த போட்டி மொத்தம் நான்கு செற்களாக நடைபெற்றது. இதில் 6-4, 4-6, 6-4, 6-3 என வென்றார் ரைபோ. கிராண்ட்ஸ்லாம் தொடரில் நடாலை வீழ்த்திய மூன்றாவது அமெரிக்கர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். மிகவும் நிதானத்துடன் அவர் கடைசி இரண்டு செற்களை வென்றிருந்தார்.

இந்த தோல்வி நடாலுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. ரஷ்ய நாட்டு வீரரை காலிறுதியில் எதிர்கொள்ள உள்ளார் ரைபோ. (ஐ)



## சர்வதேச சதுரங்க போட்டியில் இடைவிலகினார் கார்ல்சன்!

லண்டன், செப். 07

சர்வதேச சதுரங்கப் போட்டியிலிருந்து பாதியில் விலகி சதுரங்க உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் உலக சம்பியன் மேக்னஸ் கார்ல்சன்.

2022 சின்க்பீல்ட் கிண்ண சதுரங்கப் போட்டியில் உலக சம்பியன் மேக்னஸ் கார்ல்சன் பங்கேற்றார்.

3ஆவது சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த 19 வயது ஹான்ஸ் நீமேன், கார்ல்சனைத் தோற்கடித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதையடுத்து இந்தப் போட்டியில் நீமேன், 2.5 புள்ளிகளுடன் முன்னிலை வகித்தார். 1.5 புள்ளிகளுடன் கார்ல்சன் பின்தங்கியிருந்தார்.

இந்நிலையில் சின்க்பீல்ட் போட்டியிலிருந்து விலகுவதாக திடீரென அறிவித்துள்ளார் கார்ல்சன்.

அவர் இதுவரை பங்கேற்ற எந்தவொரு போட்டியிலும் இதுபோல இடையில் விலகியதில்லை. இதனால் கார்ல்சனின் முடிவு ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 4ஆவது சுற்று தொடங்கிய பிறகும் கார்ல்சன் விளையாட வரவில்லை. இதையடுத்து இந்த முடிவை அவர் அறிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்த ருவிட்டர் பதிவில், அவர் ஒரு காணொலியைப் பகிர்ந்திருந்தார். அதில், “இதுபற்றி நான் பேசினால் எனக்குப் பெரிய பிரச்னை ஏற்படும்” என உதைபந்தாட்ட பயிற்றுநர் ஜோஸ் மரினோ பேசிய காணொலியை தனது ருவிட்டுடன் சேர்த்து பகிர்ந்துள்ளதால் கார்ல்சனின் இந்த முடிவு புதிய சர்ச்சையையும் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## இருபது - 20 உலகக் கிண்ணம் தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

கேப்டவுன், செப். 07

இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 16 முதல் நவம்பர் 13 வரை 2022 இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. மொத்தமாக 45 போட்டிகள் அடிலெய்ட், பிரிஸ்பேன், கீலாங், ஹோபர்ட், மெல்பர்ன், பெர்த், சிட்னி நகரங்களில் நடைபெறவுள்ளன. நவம்பர் 9, 10 திகதிகளில் அரையிறுதி போட்டிகள் சிட்னி, அடிலெய்டில் நடைபெறவுள்ளன.

இறுதி போட்டி மெல்பர்ன் மைதானத்தில் நடைபெறுகிறது. பிரதான சுற்றின் முதல் போட்டி ஒக்ரோபர் 22 அன்று சிட்னியில் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இந்நிலையில், இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. பவுமா தலைமையிலான அணியில் காயம் காரணமாகப் பிரபல வீரர் வான் டர் டுசென் இடம் பெறவில்லை.

அணி விவரம்: பவுமா (அணித் தலைவர்), குயின்ரன் டி கொக், ரீஸா ஹெண்ட்றிக்ஸ், கிளாசன், கேஷவ் மஹராஜ், மார்க்ரம், டேவிட் மில்லர், லுங்கி நிகிடி, நோர்ட்ஜே, பர்னெல், டுவென் பிரிடோரியஸ், ரபாடா, ரிலீ ரூஸ்ஸோ, ஷம்சி, ஸ்டப்ஸ்.

மாற்று வீரர்கள் -பார்டின், மார்கோ யான்சென், அண்டிலே பெக்லுக்வாயோ (ஐ)



# எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படாது!

## காஞ்சன விஜேசேகர சபையில் அறிவிப்பு

கொழும்பு, செப். 07

**இலங்கைக்கான எரிபொருள் இறக்குமதியை பாதிக்கும் அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அந்நிய செலாவணி நெருக்கடி ஓரளவு தணிந்தவுடன் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க அமைச்சு எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் நாளாந்த எரிபொருள் நுகர்வு 3000 மெற்றிக் தொன் என தரவு பகுப்பாய்வு வெளிப்படுத்தியுள்ளது. இதில் 10 வீதம் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தாலும், மீதமுள்ள 90 வீதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தாலும் வழங்கப்படுகிறது.

தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்காக இதுவரை 6.2 மில்லியன் வாகனங்கள் பதிவு செய்துள்ளன.

பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் 1.1 மில்லியன் முச்சக்கர வண்டிகள், 3.6 மில்லியன் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 1.5 மில்லியன் மற்ற வாகனங்கள்.

அமைச்சு தற்போது பொது போக்குவரத்தை சீராக்குவதில் கவனம் செலுத்தி வருகிறது.



இதன் மூலம் பேருந்துகள் மற்றும் ரயில்களுக்கான எரிபொருள் விநியோகத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது.

ஒவ்வொரு வகை வாகனங்களின் தினசரி உபயோகத்தையும் கண்காணித்து கண்டறிந்து, தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டின் கீழ் வரையறுக்கப்பட்ட எரிபொருள் தற்போது வழங்கப்படுகிறது.

வாரத்திற்கு 30 லீற்றர் எரிபொருளை வழங்குவதற்கு முச்சக்கரவண்டி சங்கங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை.

போக்குவரத்து அமைச்சரின் பங்குபற்றுதலுடன் சங்கங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

முச்சக்கர வண்டி சங்கங்கள் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய மாத்திரமே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகளுக்கு தனித்தனியாக எரிபொருளை வழங்குவதற்கு குறிப்பிட்ட சில பிரதேசங்களில் குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒதுக்கப்படவில்லை.

முச்சக்கர வண்டிகள் வழமையான நடைமுறையை நாட்டிலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் தமக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் தங்கள் வாகனத்தை தங்களுக்கு அருகிலுள்ள காவல் நிலையத்தில் பதிவு செய்யும்படி மட்டுமே கோரப்பட்டுள்ளனர்-என்றார். (அ)



## அரிசி ஏற்றிச் சென்ற லொறி வீட்டின் மீது கவிழ்ந்து விபத்து!

கொழும்பு, செப். 07

நுவரெலியாவில் இருந்து பதுளை நோக்கி அரிசி ஏற்றிச் சென்ற லொறி ஒன்று நுவரெலியா - பதுளை பிரதான வீதியின் ஹக்கல பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

லொறியில் பயணித்த சாரதி படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலனறுவையில் இருந்து வெலிமடை பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளில் உள்ள மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு அரிசி விநியோகிப்பதற்காக பயணித்த குறித்த லொறி செங்குத்தான பகுதியில் பிரதான வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி கவிழ்ந்ததில் வீடொன்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், லொறி கவிழ்ந்த போது வீட்டினுள் யாரும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 07

இலங்கையில் ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகத்து வருவதாக மருத்துவத்துறை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

செப்ரெம்பர் மாதம் சர்வ தேச ஞாபகமறதி நோயாளர்களுக்கான மாதமாகவும், செப்ரெம்பர் 21ஆம் திகதி சர்வதேச ஞாபக மறதியாளர்கள் தினமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் ஞாபகமறதி நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்து வருவதாக இலங்கை அல்சைமர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலை இப்படியே அதிகரிக்கும் பட்சத்தில் எதிர்வரும் 2050ஆம் ஆண்டளவில் இலங்கையில் அரை மில்லியனுக்கும் அதிகமான ஞாபக மறதி நோயாளர்கள் காணப்படக் கூடும் எனவும் அல்சைமர் சங்கம் எதிர்வு கூறியுள்ளது.

கடந்த காலங்களில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கிப் போட்ட கொரோனா தொற்று காரணமாக ணவும், ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அல்சைமர் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 11 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 07

மணல்காடு பகுதியில் 37 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன் தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது குறித்த தொகை கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

யாழ்.கிளாலிப் பகுதியை சேர்ந்த 17 மற்றும் 29 வயதான இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா 11 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களையும் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பளை பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது. (அ)

## கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டு 2பேர் கொலை!

கொழும்பு, செப். 07

புசல்லாவ-இஹலகம பிரதேசத்தில் கோடரியால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வாய்த்தர்க்கம் வலுப்பெற்றமையே கொலைக்கான காரணமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டநபரின் மனைவியின் தந்தையே இந்த கொலையை செய்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 44 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே, கஹட்டகஸ்திகிலியவில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் கொலை செய்யப்பட்டு விவசாய கிணறொன்றுக்குள் வீசப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

## அனர்த்தங்களை சமாளிக்க தயாராக இருக்க பணிப்பு

கொழும்பு, செப். 07

அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர் தேவையான முன்னேற்பாடுகளை செய்துகொள்ளுமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பணிப்புரையின்பேரில் நேரடியாக உத்தரவு பிறப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி, மாவட்ட செயலகங்களின் தலைமையில், மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்புப் பிரிவுகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்கும் புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை செயற்படும்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் உள்ள நிவாரண சேவை அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வழங்கும்.

அனர்த்தங்கள் ஏற்படுவதைத் தவிர்த்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மற்றும் அவசர கால பேரிடர் சூழ்நிலை ஏற்பட்டால், அதற்காக எடுக்க வேண்டிய துரிதமான நடவடிக்கைகள் குறித்தும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அப்பணிகளின் செயல்திறனை உயர் மட்டத்தில் பேணி, தேவையான நிவாரணத் திட்டத்தை அவசரமாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் அனைத்து துறைசார் அமைச்சுக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரநிலை தொடர்பில் முறையிடுவதற்கு 117 என்ற தொலைபேசி எண், 24 மணிநேரமும் செயல்படுத்தப்படுகிறது. அனர்த்த நிவாரண சேவை நிலையத்தை 24 மணிநேரமும் செயற்படுத்த அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிதண்ணீர் மற்றும் பிற வசதிகள் இதன் மூலம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

## இலங்கையின்...

அத்துடன், இலங்கையின் அடுத்தடுத்த அரசாங்கங்கள் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் பயனுள்ள நிலைமாறுகால நீதி செயன்முறையை தொடரவும் தவறிவிட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகள் மீறல்கள், பொருளாதார குற்றங்கள் மற்றும் ஊழல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமை நாட்டின் வீழ்ச்சிக்கு அடிப்படை காரணம் - என்று தெரிவித்துள்ள ஆணையாளர், இலங்கையின் பொருளாதார நெருக்கடியை 'பேரழிவு' என விளித்ததுடன், இலங்கையை மீட்பதற்கும், நெருக்கடியின் அடிப்படைக் காரணிகளைத் தீர்ப்பதற்கும் ஆதரவளிக்குமாறும் சர்வதேச சமூகத்தை வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில், ஓய்வுபெற்ற ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அம்மையாரின் அலுவலகம் தயாரித்துள்ள இந்த அறிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. ஜெனிவாவில் நடைபெறவுள்ள 51ஆவது மாநாட்டுக்காக தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் முக்கியம் அம்சங்களே இவ்வாறு வெளியானது.

மேலும், இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு ஒரு தேசிய உரையாடலை ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க பொறுப்புக்கூறல் மற்றும் ஆழமான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை தனது அரசியல் வாழ்வில் முக்கியமான கட்டத்தில் உள்ளது. அனைத்து சமூகங்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களின் மனித உரிமைகளை கடுமையாகப் பாதித்துள்ள - கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இருக்கிறது. இது, ஆழமான சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கைகளை ஊக்குவித்துள்ளது. எனவே நாட்டை ஒரு புதிய பாதையில் வழிநடத்த அரசாங்கத்துக்கு புதிய வாய்ப்பை வழங்குகிறது.

எனினும், நிலையான முன்னேற்றங்கள் காணப்படுவதற்கு கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமைகள் மீறல்கள், பொருளாதார குற்றங்கள் மற்றும் உள்ளூார் ஊழல்கள் உட்பட பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படை காரணிகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வது இன்றியமையாதது.

தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கும், கடந்த கால மனித உரிமைகள் மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கும் அடிப்படை மாற்றங்கள் தேவைப்படும். கொடூரமான பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் அமைதியான போராட்டத்தின் மீதான ஒடுக்குமுறைகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இராணுவமயமாக்கல் நோக்கிய நகர்வை மாற்றியமைக்கவும், பாதுகாப்புத் துறை சீர்திருத்தம் என்பவற்றையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். வெகுஜன எதிர்ப்புக்களுக்குப் பதிலளிப்பதில் பாதுகாப்புப் படைகள் சமீபத்தில் கணிசமான நிதானத்தைக் காட்டினாலும், அரசாங்கம் கடுமையான அணுகுமுறையை எடுத்தது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சில மாணவர் தலைவர்களைக் கைது செய்தது மற்றும் அமைதியான போராட்டங்களை வன்முறையில் ஒடுக்கியது. நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவில் இராணுவமயமாக்கப்பட்ட சூழல் மற்றும் கண்காணிப்பு கலாசாரம் தொடர்கிறது.

இந்தநிலையில் நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது உட்பட நிலுவையில் உள்ள கடப்பாடுகளைச் செயல்படுத்த காலக்கெடுத் திட்டத்துடன் நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட மூலோபாயத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

இதேவேளை 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் பற்றிய உண்மையை கண்டறிவதில் முன்னேற்றம் இல்லாதது குறித்து கவலையை வெளிப்படுத்தும் ஆணையாளரின் அறிக்கை, சர்வதேச உதவி மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன், தொடர்ந்து சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது - என்று அறிக்கை கூறுகிறது.

அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் போர்க் குற்றங்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட சில இராணுவ அதிகாரிகளுக்கு தீவிரமாக ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறலுக்கான முன்னேற்றம் இல்லாத நிலையில், இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும், உலகளாவிய ரீதியில் உள்ள வழிகளைப் பயன்படுத்தி, பொறுப்புக்கூறல் முயற்சிகளில் ஒத்துழைக்குமாறு ஏனைய நாடுகளிடம் ஆணையாளர் கோரியுள்ளார்.

அத்துடன், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மொத்த மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் என்று நம்பத்தகுந்த வகையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பில் மேலும் நடவடிக்கைகளை ஆராயுமாறு ஆணையாளரின் அறிக்கை ஏனைய நாடுகளை வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## 22ஆம்...

இதன்படி,

உத்தேச அரசமைப்பில், அரசமைப்பு பேரவைக்கான நியமனங்களை ஜனாதிபதி 14 நாட்களுக்குள் மேற்கொள்ளாவிட்டால், அந்த நியமனங்களை மேற்கொள்ளப்பட்டவையாகக் கருதி செயல்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் சரத்துக்களை நிறைவேற்ற மக்களின் கருத்துக் கணிப்பும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அனுமதியும் தேவை. எனினும், இந்த சரத்துக்கள் திருத்தப்படுமாக இருந்தால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அதனை நிறைவேற்ற முடியும்.

தவிர, அமைச்சர்களின் நியமனத்தின்போது பிரதமரின் ஆலோசனையை பெற்று அதனை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்களை நிறைவேற்றுவதற்கு மக்களின் கருத்துக் கணிப்பும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அனுமதியும் தேவை. எனினும், இந்த விடயத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரம் போதுமானது -என்றும் குறிப்பிட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார். (ஐ)

## எரிபொருளை...

ளின் விலையை 50 ரூபாயால் குறைக்க முடியும்", என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

மக்கள் இக்கட்டான நிலையில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், இவ்வாறான எரிபொருள் சலுகையை மக்களுக்கு வழங்க வாய்ப்பு காணப்படுகிறது.

எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் செயல்படுவதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதும் வரி செலுத்தியதன் பின்னர், அரசாங்கத்துக்கு தற்போது ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபாய் இலாபம் கிடைத்து வருகிறது. விலைச் சூத்திரம் தொடர்பில் சட்ட நிலை எதுவும் இல்லாத காரணத்தால் அரசாங்கம் விரும்பியவாறு செயல்பட முடியும் - என்றார். (ஐ)

## 2025ஆம்...

நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயுதம் ஏந்தாமல், வெடிகுண்டை கையில் எடுக்காமல் முதல் தடவையாக இளம் சமுதாயம் ஒரு போராட்டத்தை நடத்தி மாற்றம் வேண்டும் என வலியுறுத்தினர். அதனை நாம் ஏற்றுக்கொண்டோம். எனினும், அதற்குள் கிளர்ச்சியை உருவாக்கி போராட்டத்தை ஒரு சிலர் நாசமாக்கினர். சரியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் திசை மாறியது. இப்போது போராட்டம் இல்லை என்றாலும் இளைஞர்களின் நோக்கம் முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது.

நாம் பல்வேறு பிரச்னைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். பலரின் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றை நான் செய்து முடிப்பேன். அடுத்த பெரும்போகத்தில் உரம், எரிபொருள் என சகலத்தையும் நாம் பெற்றுக்கொடுப்போம். அதற்கான இலக்கை நோக்கி பயணித்துக்கொண்டுள்ளோம்.

தொடர்ந்தும் எம்மால் பிச்சை எடுத்து உண்ண முடியாது, எம்மால் கடன்களில் தொடர்ந்தும் வாழ முடியாது. நாம் எவருமே வங்குரோத்து நிலைக்கு மாற விரும்புவதில்லை. கடினமான நிலையிலும் கடனை செலுத்தி முடிப்போம். கடன் இல்லாத நாட்டை உருவாக்குவோம், புதிய பொருளாதார கொள்கையை வகுப்போம். மாற்று வழிமுறைகளை தேடுவோம். அதன் மூலமாக பலமடைவோம்.

ஐக்கிய மக்கள் சக்தியாக இருந்தாலும் - பொதுஜன பெரமுனவானாலும் - ஜே.வி. பியானாலும் -தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றாலும் ஏனைய சகல கட்சிகளாக சுயாதீன அமைப்புகளாக இருந்தாலும் நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் - நாம் அனைவரும் ஒன்றிணைவோம் - ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுப்போம். மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் சகலரும் ஒன்றிணைந்து அச்சமின்றி இந்த பயணத்தை ஆரம்பிப்போம்.

முதல் போராட்டம் முடிந்துவிட்டது, நாட்டை ஒன்றிணைக்கும் இரண்டாம் போராட்டத்தை இன்றில் இருந்து ஆரம்பிக்கிறேன்- என்றார். (ஐ)

## புதிய தேசிய...

றான செயல்பாடுகளை எதிர்கொள்வதற்கும் சட்ட வலுவாக்கம் செய்வதற்கும் விசாரணை மற்றும் புலனாய்வு செயல் கருவிகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இதற்கமைய, இந்த விடயங்கள் தொடர்பாகவும் சர்வதேச தர நியமங்கள் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு தேசிய பாதுகாப்பு தொடர்பாக முழுமையான சட்ட முறைமை ஒன்றுக்கான அடிப்படை சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்படும்.

இதற்காக, பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி, நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## சர்வதேச...

கிறோம் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான ரெலோ கட்சியின் சந்திப்பை அடுத்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தமிழ் மக்கள்மீது இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்கான நீதியைக் கோரி இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தின் முன் பாரப்படுத்துமாறு மனித உரிமைகள் பேரவையின் பிரதான அங்கத்துவ நாடுகளுக்கும் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் ஐ. நா. பாதுகாப்பு சபையை தூண்டுமாறு கையெழுத்திட்ட கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளோம். இது இன்று நேற்றல்ல, எமது தொடர்ச்சியான நிலைப்பாடு.

சர்வதேச நீதிப் பொறிமுறை, சர்வதேச விசாரணை என்பவற்றுக்குக் குறைவான எந்த விடயங்களும் தமிழ் மக்களுக்கு தீர்வைத் தராது என்பதில் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதோடு மாத்திரமல்ல அதற்காக அர்ப்பணிப்போடு உழைத்து வருகிறோம் என்பதை அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிவர்.

இதேபோன்று ஐ. நா. விடயங்களில் மாத்திரமல்லாமல் அன்றாட விடயங்களிலும் தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் அவசர - அவசியமான பிரச்னைகளை தீர்ப்பதற்கும் நாங்கள் அக்கறையோடும் செயலாற்றுவோம்.

பத்திரிகை அறிக்கைகளைத் தாண்டி மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வைப் பெற செயல் வடிவம் கொடுப்பதே அர்த்தமுள்ளதாக அமையும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள். தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக பல வழிகளிலும் போராடி வரும் வரலாற்றைக் கொண்ட எமது கட்சி தொடர்ந்தும் உறுதியுடன் பயணிக்கும் என்பதை மீண்டும் வலிறுயுறுத்த விரும்புகிறோம் - என்றுள்ளது. (ஐ)

## தமிழிலும்...

நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான சாகர காரியவசம், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம். பியுமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் எம். பியுமான ரிஷாத் பதியுதீன், ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பி. அரவிந்தகுமார், தேசிய காங்கிரஸின் தலைவரும் எம். பியுமான ஏ. எல். எம். அதாவுல்லா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## தமிழருக்கான...

இருக்கின்றபோதும் அங்கு சிங்களவர்கள் நியமிக்கப்படுகின்ற நிலைமை ஆக்கிரமிப்பு செயல்பாடாகும். தவிர, வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள பிரதம செயலாளரை விட அனுபவம்மிக்கவர்கள் உள்ள நிலையில் சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நிலவும் மந்தபோசணை குறித்து நேற்று விவாதிக்கப்பட்ட நிலையில்,

நாட்டில் போசாக்கின்மை தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசப்படுகின்ற போது அமைச்சர்கள் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதே ஆசியாவின் ஆச்சரியம்.

வடக்கு - கிழக்கில் கடந்த 30 ஆண்டு போர் காலத்தில் ஏற்பட்டிருந்த போசாக்கு இன்மையை நாட்டிலுள்ள சிங்கள சகோதரர்கள் யோசிக்க வேண்டும். போசாக்கு இன்மையால் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டமே முதன்மையானது.

சந்திரிகா காலம் முதல் மகிந்த காலம் வரையில் வடக்கு, கிழக்கில் உணவுத் தடை விதிக்கப்பட்டு மக்கள் கஷ்டப்பட்டு இறந்த நிலைமையை இன்று சிங்கள மக்களால் தென்னிலங்கையில் பார்க்கமுடிகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் கடலட்டைக்காக வழங்கப்பட்டுள்ள இடங்களில் சீனாவின் நிறுவனம் ஒன்றின் செயல்பாடு காரணமாக உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சீன நிறுவனத்தால், அங்குள்ள மக்கள் போசாக்கின்மை உள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.- என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல இந்த அரசும் நாட்டைவிட்டு தப்பியோடும் நிலை வரும்

## எச்சரிக்கின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப். 07

**"போராட்டக்காரர்கள் அடங்கிவிட்டார்கள் என்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீண்டும் சுதந்திரமாக அரசியலில் இறங்கலாம் என்றும் அரசு கனவு காண்கின்றது. போராட்டக்காரர்களின் கொதிநிலை இன்னமும் அடங்கவில்லை. நாட்டை நாசமாக்கிய ராஜபக்ஷக்களை அவர்கள் சும்மாவிடமாட்டார்கள். ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல இந்த அரசே கூண்டோடு நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலை வரும்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அவசரமாக அழைத்ததன் உண்மையான நோக்கம் என்ன?

அடுத்த மாதம் ஜெனிவா அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் வெளிநாடுகளில் அடைக்கலம் கோரிய கோட்டாபயவை நாட்டுக்கு அரசு அவசரமாக அழைத்துள்ளது. இந்த அவசர அழைப்பின் பின்னணி என்ன?

மக்களுக்குப் பயந்தே, நாட்டைவிட்டுத் தப்பியோடி ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய விலகியிருந்தார். அவர் மீண்டும் நாட்டுக்கு வர விரும்பவில்லை. இந்நிலையில், அவருக்கு விசேட பாதுகாப்பை வழங்கி அவரை அரசு ஏன் மீள அழைத்தது?-என்றார். (அ)

# இறக்குமதி செலவினம் தொடர்ந்தும் வீழ்ச்சி

கொழும்பு, செப். 07

2022 ஜூலை மாதம் ஏற்றுமதியின் வருமானம் அதிகரித்துள்ளதாகவும், அதேவேளையில் இறக்குமதிச் வருடாந்த செலவுகள் தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாக குறைந்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஜூலை 2022 இல் இறக்குமதி செலவீனங்களில் குறிப்பிடத்தக்க சரிவு வங்கி அமைப்பில் அந்நிய செலாவணி பணப்புழக்க விகாரங்களுக்கு மத்தியில் ஒட்டுமொத்த செயற்பாட்டின் தாக்கத்தை பிரதிபலிக்கிறது. அதேநேரத்தில் அவசரமற்ற இறக்குமதி செலவீனங்களைக் குறைக்கும் கொள்கை நடவடிக்கைகளும் இறக்குமதி தேவை அழுத்தங்களைக் கட்டுப்படுத்த உதவியது.

இதன் விளைவாக, வர்த்தகப் பற்றாக்குறை ஆண்டு முழுவதும் ஜூலை 2022 இல் குறிப்பிடத்தக்க சுருக்கத்தைப் பதிவுசெய்தது, இதன் மூலம் உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் அழுத்தங்களைத் தளர்த்தியது. ஜூன் 2022 உடன் ஒப்பிடும்போது ஜூலை 2022 இல் தொழிலாளர்களின் பணம் ஓரளவு அதிகரித்தது, மேலும் வர்த்தக பற்றாக்குறையை விட அதிகமாக இருந்தது, இதன் மூலம் கடுமையான கொடுப்பனவுகள் அழுத்தங்களின் கீழ் அந்நிய செலாவணி பணப்புழக்க நிலைமைகளை ஆதரிக்கிறது.

ஜூலை 2022 இல் சுற்றுலாவின் வருவாய் குறைந்த அடிப்படையில் அதிகரித்தது. அரசாங்கப் பத்திரச் சந்தை மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகியவற்றில் வெளிநாட்டு முதலீடு ஜூலை 2022 இல் ஓரளவு நிகர வரவை பதிவு செய்தது.

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு அந்நிய செலாவணி பணப்புழக்கத்தை மத்திய வங்கி தொடர்ந்து வழங்கியது, இது மொத்த உத்தியோகபூர்வ கையிருப்புகளின் பயன்படுத்தக்கூடிய அளவைக் குறைக்கிறது. (அ)

# ஆசிரியர்களின் கடின உழைப்பின் வெளிப்பாடே மாணவரின் வெற்றி

## மாணவர்கள் கௌரவிப்பில் சமட் ஹமீட் தெரிவிப்பு

அம்பாறை, செப். 07

மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் கொரோனா காலத்தில் தொய்வில் இருந்தாலும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் விடா முயறசியினால் சிறந்த முன்னேற்றத்தை கண்டுள்ளது. கிழக்கு மாகாணம் அண்மையில் வெளியான உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருப்பது ஆசிரி யர்களின் கடின உழைப்பின் வெளிப்பாடாகும். மாண வர்கள் தியாக சிந்தனையுடன் கற்றால் உயரிய நிலையை அடையலாம் என்பதற்கு அந்த பெறுபேறுகள் சாட்சியாக இருக்கிறது என கல்முனை மாநகர சபை உறுப்பின ரும், அல்- மீஸான் பவுண்டஷன் மருதமுனை இணைப்பாளருமான சமட் ஹமீட் தெரிவித்தார்.

கல்முனை கல்வி வலய மருதமுனை அல்- மதீனா வித்தியாலயத்தில் கடந்த ஆண்டு தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் தோற்றி கூடுதலான புள்ளிகளை பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது. பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினரும், அல்- மீஸான் பவுண்டஷன் மருதமுனை இணைப்பா ளருமான சமட் ஹமீட் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்து உரையாடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பிள்ளைகள் பெற்றோரின் பொருளாதார நிலைய றிந்து கற்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதீத விலையேற்றம் காரணமாக அன்றாட வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் பிரச்னையினால் நிறைய தொழில்கள் முடங்கியுள்ளது. இன்று கௌரவிக்கப்பட்ட மாண வர்கள் மட்டுமின்றி எல்லா மாண வர்களும் எதிர்காலத்தில் நாட்டின் வளர்ச் சியை முன்னோக்கியதாக கொண்டுசெல்லத்தக்கதாக தங்களை வளர்த்துக்கொள்ளவேண்டும்- என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர் கள், தேசிய காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர் ஐ. நூருல் பௌஸ், மத்திய குழு உறுப்பினர்களான ஏ.எம்.ஷிபான், எம்.எஸ்.எம். சர்ஜில் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, செப். 07

அக்கரைப்பற்று ஹிஜ்ரா வீதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி, உப பொலிஸ் பரிசோதகர்களான நூர்தீன், அஸீஸ் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேகநபர் ஒருவரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 860 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இறக்காமம் பிரதேசத்தில் மின்சார சபையின் உப அலுவலகம் அமைப்பதற்கு நடவடிக்கை

அம்பாறை, செப். 07

இறக்காமம் பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசங்களில் தொடர் தேர்ச்சியாக நீண்ட காலமாக இருந்துவரும் பிரதேசத்திற்கான தனியான மின்சார சபையின் உப அலுவலகம் ஒன்றின்மையானது, மின்சார சபையின் உட்சபட்ச சேவையினை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை பாவனையாளர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக முன்னறிவித்தலற்ற மின் தடை, திருத்தவேலைகளுக் கான காலதாமதம், மின் பாவனையாளர்களின் முறைப்பாடுகளை கவனத்திற்கொள்ளாமை, காலதாமதமான சேவை போன்ற பல பிரச்னைகளை பொதுமக்கள் எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே இறக்காமம் பிரதேசத் திற்கான தனியான மின்சார சபை உப அலுவலகம் ஒன்றினை அமைப்பது தொடர்பாகவும் பொதுமக்களுக்கு மின்சார சபையின் சேவையினை சிறந்த முறையில் வழங்கவதற்கான நடவடிக்கைகள் தொடர் பிலான உயர்மட்ட கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை அம்பாறை பிராந்திய பிரதம பொறியியலாளர் காரியாலத்தில் இடம் பெற்றது.



இதில் அம்பாறை பிராந்திய பிரதம பொறியியலாளர் எம்.ஆர்.எம். பர்ஹான், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ். ஜெமீல் காரியப்பர் தலைமைலான குழுவினர் பங்கேற்றனர்.

இதன்போது விடயங்களை கேட்டறிந்த பிரதம பொறியியலாளர் பர்ஹான், மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்துவதாகவும் பிரதேசத்திற்கான தனியான மின்சார சபை உப அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அத்துடன் மின் பாவனையாளர்களுக்கு அசௌகரியம் அற்ற வகையில் மின்சார சபையின் சேவைகளை வழங்குவதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்தார். (அ)

# மணல் அனுமதிப்பத்திரத்தில் மோசடி; எட்டு சாரதிகள் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், செப். 07

அனுமதிப் பத்திரங்களில் மோசடி செய்து மணலேற்றிச் சென்ற எட்டு டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், அதன் சாரதிகள் எண்வரையும் பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

யாழ்ப்பாணம்-கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனங்களை கைதடி பகுதியில் சாவகச்சேரி பொலிஸார் சோதனையிட்டபோதே இந்த மோசடி தெரிய வந்தது.

அதனை அடுத்து குறித்த டிப்பர் வாகனங்களை கைப்பற்றிய சாவகச்சேரி பொலிஸார், அனுமதிப் பத்திரங்களில் மோசடி செய்த குற்றத்தில் சாரதிகளைக் கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட சாரதிகளையும், கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி-எஸ்.உதயகுமார்



7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் யாழ் பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி-கடாச்சரம் மார்க்கண்டு
7.20 மணி : சித்த மருத்துவம்-வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்- தமிழ் ரொக்கர்ஸ்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மிருதன்,மொட்ட சிவா கெட்ட சிவா திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ-பெண்களுக்கான தனித்துவமான நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-ரேவசுரேஸ்- ஆசிரிய ஆலோசகர்-மட்டக்களப்பு கல்வி வலயம்




9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரீவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு